சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் தொல்லியல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 29


## தங்கம் தென்னரசு
தொழில் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| I – கலை பண்பாட்டுத் துறை | | |
| 1 | முன்னுரை | 1–2 |
| 1.1 | கலை பண்பாட்டு இயக்ககம் | 2–4 |
| 1.2 | துறையின் நோக்கங்கள் | 5 |
| 1.3 | மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் | 5–10 |
| 1.4 | மாவட்ட கலை மன்றங்கள் | 10–11 |
| 1.5 | கலைக் கல்வி | 12 |
| 1.5.1 | தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக் கழகம் | 12–14 |
| 1.5.2 | அரசு இசைக் கல்லூரி, சென்னை | 15 |
| 1.5.3 | அரசு இசைக் கல்லூரி, மதுரை | 16 |
| 1.5.4 | அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர் | 16–17 |
| 1.5.5 | அரசு இசைக் கல்லூரி, திருவையாறு | 17–18 |
| 1.5.6 | அரசு இசைப்பள்ளிகள் | 18–19 |
| 1.5.7 | அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை | 19–20 |

| | | |
|---|---|---|
| 1.5.8 | அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 20 |
| 1.5.9 | அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம் | 21 |
| 1.5.10 | கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 21–22 |
| 1.6 | தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் | 22–23 |
| 1.6.1 | சவகர் சிறுவர் மன்றங்களில் பகுதிநேர பயிற்சிகள் | 23–24 |
| 1.6.2 | பயிற்சி திட்டங்கள் மாவட்ட அளவிலான கோடைக்கால கலை பயிற்சி முகாம் | 24 |
| 1.6.3 | மாநில அளவிலான கோடைக் கால மற்றும் குளிர்கால பயிற்சி முகாம்கள் | 24–25 |
| 1,6.4 | மாநில அளவிலான கைவினை முகாம் | 25 |
| 1.6.5 | மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள் | 25–26 |
| 1.6.6 | தேசிய அளவிலான திட்டங்களில் சவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு | 26–27 |
| 1.6.7 | தேசிய பாலஸ்ரீ விருது | 27–28 |
| 1.7 | கலைச்செம்மல் விருதுகள் | 28–29 |

| | | |
|---|---|---|
| 1.8 | மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி மற்றும் விருதுகள் | 29 |
| 1.9 | தனி நபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக் காட்சி (Group Show) நடத்திட கவின் கலைஞர்களுக்கு நிதியுதவி | 30 |
| 1.10 | கவின் கலை பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை | 30–31 |
| 1.11 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் | 31–35 |
| 1.12 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 35–36 |
| 1.12.1 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணிகள் | 36–37 |
| 1.12.2 | கலைமாமணி விருது | 37 |
| 1.12.3 | இதர பணிகள் | 38 |
| 1.13 | தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 39 |
| 1.14 | அறிவிப்புகள் 2022–2023 | 39–44 |
| 1.15 | சாதனைகள் | 44–46 |
| 1.16 | பிற சாதனைகள் | 47–51 |
| 1.17 | முடிவுரை | 51–52 |

| | | |
|---|---|---|
| | இணைப்புகள் | 53–62 |
| | நிழற்படங்கள் | 63–81 |
| **II – அருங்காட்சியகங்கள் துறை** | | |
| 2 | முன்னுரை | 83–84 |
| 2.1 | துறையின் நோக்கங்கள் | 84–85 |
| 2.2 | நிருவாக அமைப்பு | 85–86 |
| 2.3 | அரசு அருங்காட்சியகம், சென்னை | 86–88 |
| 2.4 | மாவட்ட அருங்காட்சியகங்கள் | 88–89 |
| 2.5 | பல்வேறு பணிகளின் விவரங்கள் | 89–93 |
| 2.6 | சிறப்பு நிகழ்வுகள் | 93–96 |
| 2.7 | வெளியீடுகள் | 96 |
| 2.8 | அருங்காட்சியக துறையில் சமீபத்திய சேகரிப்புகள் | 97–99 |
| 2.9 | கல்விச் செயல்பாடுகள் | 99–107 |
| 2.10 | முடிவுரை | 107–108 |
| | நிழற்படங்கள் | 109–123 |
| **III – தொல்லியல் துறை** | | |
| 3 | முன்னுரை | 125–126 |
| 3.1 | துறையின் நோக்கங்கள் | 126 |
| 3.2 | நிருவாக அமைப்பு | 127–128 |
| 3.3 | காலக் கணிப்பில் ஒரு திருப்புமுனை | 129–132 |
| 3.4 | வரலாற்றுச் சின்னங்களை பாதுகாத்தல் | 132–136 |

| | | |
|---|---|---|
| 3.5 | புதிதாக அறிவிக்கப்பட்ட சின்னங்கள் | 136–137 |
| 3.6 | புதிய தொல்லியல் தளங்கள் | 137–138 |
| 3.7 | வரலாற்றுச் சின்னங்களின் தொடர் பராமரிப்பு பணிகளுக்கு நிதி | 139 |
| 3.8 | பழங்கால கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் | 139–141 |
| 3.9 | புதிதாக பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகளை சுற்றுலா தளங்களாக மாற்றுதல் | 141–142 |
| 3.10 | உதிரிச் சிற்பங்கள் கல்வெட்டுகள் போன்ற தொல்லியல் கலைச் செல்வங்களை பாதுகாத்தல் | 142 |
| 3.11 | தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்கால முன்னேற்றங்கள் என்னும் தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் | 143 |
| 3.12 | தொல்லியல் அகழாய்வுகள் | 144–145 |
| 3.13 | தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்–2022 | 145–161 |
| 3.14 | புதிய கற்கால தளங்கள் ஆய்வு | 162–163 |

| | | |
|---|---|---|
| 3.15 | பொருநை(தாமிரபரணி) ஆற்றங்கரை –கள ஆய்வு | 163–164 |
| 3.16 | கொற்கை துறைமுகம் – முன்கள ஆய்வு | 164–165 |
| 3.17 | தொல்லியல் அகழாய்வுகள் – 2023 | 165–166 |
| 3.18 | அறிவியல் ஆய்வுகள் | 166–169 |
| 3.19 | தொல்லியல் அகழ்வைப்பகங்கள் | 170–171 |
| 3.20 | கீழடியில் புதிய அகழ்வைப்பகம் | 172–174 |
| 3.21 | பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி மாவட்டம் | 175–176 |
| 3.22 | கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகம், அரியலூர் மாவட்டம் | 176–177 |
| 3.23 | மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் மேம்பாடு | 177 |
| 3.24 | அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல் | 178–179 |
| 3.25 | கல்வெட்டியல் | 179–183 |
| 3.26 | தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம் | 183–186 |
| 3.27 | தமிழ்நாட்டிலுள்ள பாறை ஓவியங்கள் | 187–188 |

| | | |
|---|---|---|
| 3.28 | அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் | 188–191 |
| 3.29 | மாநில சுவடிக் குழுமம் | 191–193 |
| 3.30 | சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre) | 193–194 |
| 3.31 | முக்கிய செயல்பாடுகள் | 194–196 |
| 3.32 | முடிவுரை | 197–198 |
| | இணைப்பு | 199–203 |
| | நிழற்படங்கள் | 205–235 |

# கலை பண்பாட்டுத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2023 – 2024

## 1. முன்னுரை

தமிழ்நாடு மிகச் சிறந்த வரலாற்றுப் பாரம்பரியம், மரபுகள் மற்றும் துடிப்பான பண்பாட்டின் தாயகமாகும். இந்த மாநிலம் தலைசிறந்த பண்பாடு, பிரம்மாண்டமான கோவில்கள், ஈர்ப்புமிகு கலைகள் மற்றும் வெண்கல சிற்பங்கள் உள்ளிட்ட எழில்மிகு கைவினை பொருட்களுக்கு புகழ் பெற்றது.

மொழி, இலக்கியம், கட்டடக்கலை, சிற்பம், இசை, நடனம், அரங்கக் கலைகள், நாட்டுப்புறக் கலைகள், தற்காப்புக் கலைகள் மற்றும் ஓவியம் போன்றவற்றில் இதன் பெருமைமிகு காட்சி வெளிப்படுகிறது. செவ்வியல் நடனமான பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புற நடனங்களான தப்பாட்டம், கரகாட்டம்,

காவடியாட்டம் போன்ற துடிப்பான நடன வடிவங்களை பெற்றுள்ள பெருமைக்குரியது இந்த மாநிலம்.

தமிழ் மக்களின் உயிர்ப்பும் பன்முகத் தன்மையும் கொண்ட வாழ்க்கைமுறையையும், பண்பட்ட நிலையையும் சித்தரிக்கும் பல கலைத் திருவிழாக்களை கொண்டது தமிழ்நாடு. மண்டல மற்றும் மத எல்லைகளைக் கடந்து மாநிலத்தின் அனைத்து மக்களாலும் இப்பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

தமிழ் பண்பாட்டின் தனித்துவம் அதன் தொன்மை, உயிர்மை, தகவமைத்துக்கொள்ளும் தன்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றில் உள்ளது. அதனாலேயே இந்த மாநிலம் இந்தியாவின் 'பண்பாட்டுத் தலைநகராக' மதிக்கப்படுகிறது.

## 1.1 கலை பண்பாட்டு இயக்ககம்


கலை பண்பாட்டு இயக்ககம் 1991 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இயக்குநர் அவர்களின்

தலைமையில் செயல்பட்டு வருகிறது. இத்துறை

1. ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்,
2. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம்,
3. இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள்,
4. ஒரு அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி,
5. நான்கு அரசு இசைக் கல்லூரிகள்,
6. ஒரு அரசு நிதியுதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி,
7. பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்,
8. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,
9. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்,
10. 40 தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள்

ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இயக்குநரகம் ஒரு இணை இயக்குநர், 3 துணை இயக்குநர்கள், 8 மண்டல உதவி இயக்குநர்கள், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் பிற அலுவலர்களை கொண்டுள்ளது.


துறையின் படிநிலை(Hierarchy)
கலை பண்பாட்டுத்துறை

## 1.2 துறையின் நோக்கங்கள்

கலை பண்பாட்டுத் துறையின் நோக்கங்கள் :-

- கலை நிகழ்ச்சி வாயிலாக பல்வேறு கலை வடிவங்களை காட்சிப்படுத்துதல்.
- செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கி ஊக்குவித்தல்.
- கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
- நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- நிகழ்த்துக்கலைகள் மற்றும் கவின் கலைக் கல்வியை ஊக்குவித்தல்.
- பல்வேறு கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.
- கண்காட்சிகள் நடத்துதல் மற்றும்
- சிறந்த சிற்பிகள், ஓவியர்கள், செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

## 1.3 மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் ஏழு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு, உதவி இயக்குநர்களின்

தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலக் கலை பண்பாட்டு மையமும் நான்கு முதல் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியது. இம்மையங்கள் வாயிலாக கலை நிகழ்ச்சிகள், கலைப்போட்டிகள், கலைப் பயிற்சி முகாம்கள் மற்றும் ஓவிய–சிற்ப கலைக்காட்சிகள் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட கலை மன்றங்கள், சவகர் சிறுவர் மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றின் திட்டங்கள் மண்டலக் கலை பண்பாட்டு மையங்களால் செயல்படுத்தப்படுகின்றன.

| **வ.எண்** | **மண்டலக் கலை பண்பாட்டு மையம்** | **மாவட்டங்கள்** |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர். |

| | | |
|---|---|---|
| 2 | சேலம் | சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி. |
| 3 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை. |
| 4 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர். |
| 5 | மதுரை | மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தென்காசி. |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர். |

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கீழ்கண்ட கலை நிகழ்ச்சிகளை மாவட்டங்களில் நடத்துகின்றன:–

| வ. எண் | மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள் | |
|---|---|---|
| 1 | **காஞ்சிபுரம் மண்டலம்**: | |
| | கார்த்திகை தீபம் | திருவண்ணாமலை மாவட்டம் |
| | ஆடிக்கிருத்திகை | திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| | மகாசிவராத்திரி | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | கோடை விழா | ஏலகிரி, திருப்பத்தூர் மாவட்டம் |
| | | ஜவ்வாது மலை, திருவண்ணாமலை மாவட்டம் |
| 2 | **சேலம் மண்டலம்** | |
| | கோடை விழா | ஏற்காடு, சேலம் மாவட்டம் |
| | ஆடிப்பெருக்கு விழா | ஒகேனக்கல், தருமபுரி மாவட்டம் |
| | மாங்கனிவிழா | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 3 | **தஞ்சாவூர் மண்டலம்** | |
| | சீர்காழி தமிழிசை மூவர் விழா | மயிலாடுதுறை மாவட்டம் |

| | | |
|---|---|---|
| | இராஜராஜசோழன் சதய விழா | தஞ்சாவூர் மாவட்டம் |
| | ஆழித்தேர் விழா | திருவாரூர் மாவட்டம் |
| 4 | **திருச்சிராப்பள்ளி மண்டலம்** | |
| | வைகுண்ட ஏகாதசி விழா | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | அருள்மிகு நந்திதேவர் திருக்கல்யாண விழா | திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம் |
| | திருநெடுங்குடி மகாசிவராத்திரி விழா | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | **மதுரை மண்டலம்** | |
| | கோடை விழா | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| | சித்திரைத் திருவிழா | மதுரை |
| 6 | **திருநெல்வேலி மண்டலம்** | |
| | பாவை விழா | ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் |
| | சாரல் விழா | குற்றாலம், தென்காசி மாவட்டம் |
| | அருவித்திருவிழா | திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம் |

| | | |
|---|---|---|
| | குமரித் திருவிழா | கன்னியாகுமரி மாவட்டம் |
| 7 | **கோயம்புத்தூர் மண்டலம்** | |
| | தீரன் சின்னமலை விழா | ஈரோடு மாவட்டம் |
| | ஆடிப்பெருந் திருவிழா | திருப்பூர் மாவட்டம் |
| | கோடை விழா | உதகை, நீலகிரி மாவட்டம் |
| | | வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம் |

## 1.4 மாவட்ட கலை மன்றங்கள்

கலைகளை ஊக்கப்படுத்தவும், பரப்பவும், பேணிக் காக்கவும் 1994 ஆம் ஆண்டு மாவட்ட கலை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை கலைஞர்களிடம் உள்ள திறமைகளை கண்டறிந்து அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. இம்மன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமை மிக்க பதினைந்து கலைஞர்களை கண்டறிந்து பின்வருமாறு பிரிவிற்கு 3 விருதுகள் வீதம் வழங்குகின்றன:–

| வ. எண் | வயதுப் பிரிவு | விருதின் பெயர் | விருதுத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | 18 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை இளமணி | 4,000/- |
| 2 | 19 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை வளர்மணி | 6,000/- |
| 3 | 36 முதல் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலைச் சுடர்மணி | 10,000/- |
| 4 | 51 முதல் 65 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை நன்மணி | 15,000/- |
| 5 | 66 வயதிற்கு மேற்பட்டவர்கள் | கலை முதுமணி | 20,000/- |

கலைஞர்களுக்கு சீரான உதவியை உறுதி செய்யவும், அரசால் வழங்கப்படும் நிதியுதவிகளை எளிதாகப் பெறவும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறவும், கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. 73,348 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 1.5 கலைக் கல்வி

பல்வேறு நிலைகளில் நிகழ்த்துக்கலைகள் மற்றும் கவின் கலைகளை வளர்ப்பதற்காக பல கலைக் கல்வி நிறுவனங்களை அரசு நிறுவியுள்ளது.

### 1.5.1 தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகச் சட்டம், 2013 மூலம் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் 14.11.2013 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம் 'தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்' என 2020-ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப்பல்கலைக் கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் முதுகலை பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டப் படிப்புகள், ஆய்வியல் நிறைஞர் படிப்புகள் மற்றும் ஓவியம் மற்றும் காட்சி வழி தகவல் தொடர்பு வடிவமைப்பு பிரிவுகளில் மூன்றாண்டு பகுதி நேர முதுகலை பட்டப்படிப்புகள் (வார இறுதி நாட்களில்) பயிற்றுவிக்கப்படுகின்றன.

கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் நான்கு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் திருச்சிராப்பள்ளி, கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகள் செயல்படுகின்றன.

எம்.ஜி.ஆர் அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கல்லூரி மற்றும் 13 சுயநிதிக் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. அவை:

1. இராணி லேடி மெய்யம்மை ஆச்சி தமிழ் இசைக் கல்லூரி, மதுரை.

2. ஸ்ரீ அன்னை காமாக்ஷி இசை மற்றும் கவின் கலைக் கல்லூரி, கே.கே நகர், சென்னை.
3. பிரிட்ஜ் அகாடமி நுண்கலைக் கல்லூரி, சூளைமேடு, சென்னை.
4. பரதம், செனாய் நகர், சென்னை.
5. ஸ்ரீ தியாகராஜா இசைக் கல்லூரி, மார்த்தாண்டம், கன்னியாகுமரி.
6. ரவிராஜ் நுண்கலைக் கல்லூரி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்.
7. மெக்கன்ஸ் ஊட்டி கட்டடக் கலைக் கல்லூரி, உதகை, நீலகிரி மாவட்டம்.
8. பாமி டியோர் திரைப்படம் மற்றும் ஊடகக் கல்லூரி, தஞ்சாவூர்.
9. பாமி டியோர் திரைப்படம் மற்றும் ஊடகக் கல்லூரி, மேற்கு தாம்பரம், சென்னை.
10. அழகப்பா நிகழ்த்துக்கலை அகாடமி கல்லூரி, காரைக்குடி.
11. சென்னை திரைப்பட தொழிற்பள்ளி, கொட்டிவாக்கம், சென்னை.
12. தமிழிசைக் கல்லூரி, இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை.
13. எம்.இ.டி நுண்கலைக் கல்லூரி, செண்பகராமன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்.

### 1.5.2 அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழுங்கப்படுகின்றன:

1. குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதஸ்வரம், தவில், கிராமியக் கலை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்.
2. நட்டுவாங்கத்தில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு.
3. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு .
4. குரலிசை, வயலின், வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்.
5. மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள்.

### 1.5.3 அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை, அரசு இசைக் கல்லூரி 1979 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், தவில், புல்லாங்குழல், நாதஸ்வரம், பரதநாட்டியம் மற்றும் கிராமியக் கலை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்
2. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு
3. குரலிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்.
4. மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள்.

### 1.5.4 அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர், அரசு இசைக் கல்லூரி 1993 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம், தவில் மற்றும் நாதஸ்வரம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்.
2. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு.
3. குரலிசை, வீணை, வயலின் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்.
4. மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை மற்றும் வயலின் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள்.

### 1.5.5 அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

திருவையாறு, அரசு இசைக் கல்லூரி 1997 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், நாதஸ்வரம், தவில் மற்றும் கிராமியக்கலை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்.
2. நட்டுவாங்கத்தில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு.
3. இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு

4. குரலிசை, வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்
5. குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் இரண்டாண்டு முதுகலை பட்டப்படிப்புகள்
6. இசையில் முனைவர் பட்ட ஆய்வு படிப்புகள்.

அரசு இசைக்கல்லூரி மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ரூ.500/– வீதம் 10 மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 1.5.6 அரசு இசைப்பள்ளிகள்

இசை மற்றும் கலைகளைப் பயிலும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்க 17 மாவட்டங்களில் அரசு இசைப்பள்ளிகள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகியவற்றில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

அரசு இசைப்பள்ளி மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ரூ.400/− வீதம் 10 மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 1.5.7 அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி 1850 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள்.

2. சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக் கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகள்.

### 1.5.8 அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரி 1887 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழுங்கப்படுகின்றன:

1. வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள்.
2. வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்.

### 1.5.9 அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரியில் மரபு கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக் கலையில் பி.எப்.ஏ. (கற்சிற்பம், சுதைச் சிற்பம், மரச் சிற்பம் மற்றும் உலோகச் சிற்பம்) (B.F.A. in Traditional Sculpture), மரபு ஓவியம் மற்றும் வண்ணக் கலையில் பி.எப்.ஏ. (B.F.A. in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.10 கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி, கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும்

கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் கீழ்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

1. இசையில் முனைவர் பட்டப்படிப்பு.
2. இசையில் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டப்படிப்பு.
3. பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்.
4. பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்புகள் மற்றும் மூன்றாண்டு பட்டப் படிப்புகள்.

## 1.6 தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு கலைப் பயிற்சிகள் வழங்குதல், அவர்களிடம் மறைந்துள்ள கலைத் திறன்களை வெளிக்கொணருதல், கலைக்கல்வி வழங்குதல் ஆகியவற்றை செயல்படுத்தும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு சவகர் சிறுவர் மன்றம் சென்னையில் தொடங்கப்பட்டது.

சவகர் சிறுவர் மன்றங்கள் 24 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களாகவும், 14 இடங்களில் விரிவாக்க மையங்களாகவும், 2 இடங்களில் ஊரக மையங்களாகவும் மொத்தம் 40 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்கு ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை சென்னை, மயிலாப்பூரில் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி நடைபெறுகிறது.

### 1.6.1 சவகர் சிறுவர் மன்றங்களில் பகுதி நேர பயிற்சிகள்

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, டிரம்ஸ், பேண்டு, தையல், ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய கலைகளில் சென்னையிலும், மாணவர்களின்

விருப்பத்திற்கு ஏற்ப மேலுள்ள ஏதேனும் 4 கலைகளில் மாவட்ட மையங்களிலும் பகுதி நேரக் கலைப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பயிற்சி திட்டங்கள்**

### 1.6.2 மாவட்ட அளவிலான கோடைக்கால கலை பயிற்சி முகாம்

மாவட்ட அளவில் கோடைக்கால கலை பயிற்சி முகாம்கள் சவகர் சிறுவர் மன்ற மையங்களில் நடத்தப்படுகின்றன.

### 1.6.3 மாநில அளவிலான கோடைக்கால மற்றும் குளிர்கால பயிற்சி முகாம்கள்

ஆண்டுதோறும் கோடை விடுமுறையின் போது, ஏதாவது ஒரு மலைவாழிடத்தில் மாநில அளவிலான கோடைக்கால உண்டுறை முகாம் நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் அரையாண்டு விடுமுறையின் போது ஏதேனும் ஒரு மாவட்டத்தில் மாநில அளவிலான குளிர்கால உண்டுறை முகாம் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த

100 சவகர் சிறுவர் மன்ற சிறார்கள் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா மற்றும் சிலம்பம் ஆகியவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்று பயிற்சி பெறுகின்றனர்.

### 1.6.4 மாநில அளவிலான கைவினை முகாம்

ஆண்டுதோறும் காலாண்டு விடுமுறையின் போது மாநில அளவிலான உண்டுறை முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாமில் சுடுமண் சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், பத்திக், கைவினை மற்றும் மெழுகுவர்த்தி செய்தல் போன்ற பல்வேறு கலைகளில் மாநிலத்திலுள்ள 100 சவகர் சிறுவர் மன்ற சிறார்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 1.6.5 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள்

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது மற்றும் 13 முதல் 16 வயது பிரிவினர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட

அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவிலானக் கலைப்போட்டிகளில் முதல் பரிசு பெற்ற 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவு மாணாக்கர்களுக்கு இடையே மாநில அளவிலான கலைப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் முதல் பரிசாக ரூ.10,000/– வீதம் 8 மாணாக்கர்களுக்கும் (2 வயது பிரிவுகள் x 4 கலைப் பிரிவு), இரண்டாவது பரிசாக ரூ.7,500/– வீதம் 8 மாணாக்கர்களுக்கும் மற்றும் மூன்றாவது பரிசாக ரூ.5,000 வீதம் 8 மாணாக்கர்களுக்கும் என 24 மாணாக்கர்களுக்கு மொத்தம் ரூ.1,80,000/– பரிசுத் தொகையும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

### 1.6.6 தேசிய அளவிலான திட்டங்களில் சவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு

ஆண்டுதோறும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினத்தில் (நவம்பர்–14) புதுதில்லி,

தேசிய சிறுவர் மன்றம் மூன்று நாட்கள் தேசிய ஒருமைப்பாட்டு கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. இந்நிகழ்ச்சிகளில் தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து மாணவ, மாணவிகள் பங்கேற்கின்றனர்.

### 1.6.7 தேசிய பாலஸ்ரீ விருது

தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தகுதியானவர்களை தேர்வு செய்ய புதுதில்லி, தேசிய சிறுவர் மன்றம் போட்டிகளை நடத்துகிறது. இப்போட்டிகள் முறையே படைப்பாக்கச் செயல்திறன் Creative Performance (Dance, Vocal Music, Percussion, Instrumental Music, Theatre Art, Puppetry), நுண்கலை படைப்பாற்றல் Creative Arts (Painting, Craft, Sculpture, Visual Art), படைப்பாற்றல் மிக்க அறிவியல் புதுமைகள் Creative Scientific Innovations (Scientific Model Making, Project Making, Scientific Innovations, Problem–solving) மற்றும் எழுத்துக்கலை படைப்பாற்றல் Creative Writing (Story, Prose, Poem,

Dialogue and Play) ஆகிய 4 வகையான முதன்மை கலைகளில், 16 வகை கலைப்பிரிவுகளில் நடத்தப்படுகின்றன.

முதற்கட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகளும், தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளும், இறுதியாக தேசிய அளவிலான போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

## 1.7 கலைச்செம்மல் விருதுகள்

மரபுவழி மற்றும் நவீனபாணி கலைப்பிரிவுகளில் சிறந்து விளங்கும் ஓவியம் மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் 'கலைச்செம்மல்' விருதுகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு செப்பு பட்டயமும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. கலைச்செம்மல் விருது பெறுபவர்களுக்கு வழங்கப்படும் விருதுத் தொகை ரூ.50,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், விருது பெறும் நபர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து ஆறாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை, புகழ்பெற்ற 21 மரபுவழி கலைஞர்களுக்கும், 52 நவீனபாணி கலைஞர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.8 மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி மற்றும் விருதுகள்

தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து ஓவியம் மற்றும் சிற்ப கலைப்படைப்புகள் பெறப்பட்டு, மிகச்சிறந்த கலைப்படைப்புகள் அரசால் அமைக்கப்படும் தெரிவுக் குழுவால் தேர்வு செய்யப்படுகின்றன. சிறந்த மரபுவழி, நவீனபாணி ஓவியம் மற்றும் சிற்ப கலைப்படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. மூத்தோர் பிரிவில் (30 வயதுக்கு மேற்பட்ட) 30 கலைஞர்களுக்கு ரூ.15,000/– வீதம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இளையோர் பிரிவில் (30 வயதிற்கு உட்பட்ட) 30 கலைஞர்களுக்கு ரூ.10,000/– வீதம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## 1.9 தனி நபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கவின் கலைஞர்களுக்கு நிதியுதவி

ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க வளரும் கலைஞர்களை ஊக்கப்படுத்த தனிநபர் கலைக்காட்சிகள் மற்றும் கூட்டுக் கலைக்காட்சிகள் நடத்தப்படுகின்றன. தனிநபர் கலைக்காட்சி நடத்த ரூ.25,000/– வீதம் 10 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக்காட்சி நடத்த குழுவிற்கு ரூ.50,000/– வீதம் 5 குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 1.10 கவின் கலை பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

அரசு கவின் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில், இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணவர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின்

கலை பயிலும் சிறந்த 4 மாணவர்களுக்கு தலா ரூ.5,000/– வீதமும் கல்வி உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

அதே போன்று, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணவர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின் கலை பயிலும் சிறந்த 2 மாணவர்களுக்கு தலா ரூ.5,000/– வீதமும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. ரூ.90,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது.

### 1.11 தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கி நாட்டுப்புறக் கலைகளை வளர்க்கவும், மக்களிடையே அக்கலைகளை பிரபலப்படுத்தவும் மேலும், இந்த நாட்டுப்புறக் கலைகள் அழியாமல் பாதுகாத்து எதிர்கால தலைமுறையினருக்கு எடுத்துச்

செல்லவும் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், 2007–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு நாட்டுப்புறக் கலை வடிவங்களை நிகழ்த்தும் பணியில் நாட்டுப்புறக் கலைஞர்கள் ஈடுபடுகின்றனர். தமிழ்நாடு அரசு 99 நாட்டுப்புறக் கலை வடிவங்களை அடையாளம் கண்டு பட்டியலிட்டுள்ளது.

இதுவரை 51,403 நாட்டுப்புறக் கலைஞர்கள் வாரிய உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். ரூ.204.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 9,097 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் கீழ்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **நலத்திட்ட உதவிகள் விவரம்** | **பயனாளிகள் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட தொகை** (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூக்குக் கண்ணாடி வாங்குதல் | 3863 | 24.34 |

| | | | |
|---|---|---|---|
| 2 | கல்வி | 3798 | 53.95 |
| 3 | திருமணம் | 653 | 17.13 |
| 4 | மகப்பேறு | 19 | 1.14 |
| 5 | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 1 | 0.03 |
| 6 | இயற்கை மரணம் / ஈமச் சடங்கு செலவு | 763 | 108.19 |
| | மொத்தம் | 9097 | 204.78 |

நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு மற்றும் இறப்பு போன்றவற்றிற்குக் கீழ்வருமாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:–

| **வ. எண்** | **நிதி உதவிகள் விவரம்** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 1 | ஆண்டு கல்வி உதவித் தொகை (இரு வாரிசுகள்) | |
| | பத்தாம் வகுப்பு பயிலும் மகள் | 1,000 |
| | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |

| | | |
|---|---|---|
| | பதினோராம் வகுப்பு பயிலும் மகள் | 1,000 |
| | பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மகள் | 1,500 |
| | பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | முழுநேர பட்டப் படிப்பு | 1,500 |
| | முழுநேர பட்டப் படிப்பு விடுதி வசதியுடன் | 1,750 |
| | முழுநேர முதுகலை பட்டப்படிப்பு | 4,000 |
| | முழுநேர முதுகலை பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 5,000 |
| | தொழில்நுட்பப் பட்டப்படிப்பு (சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்) | 4,000 |
| | தொழில்நுட்பப் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 6,000 |
| | முழுநேர முதுகலை தொழில்நுட்பப் பட்டப்படிப்பு | 6,000 |
| | முழுநேர முதுகலை தொழில்நுட்பப் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 8,000 |
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) | 1,000 |

| | | |
|---|---|---|
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) விடுதி வசதியுடன் | 1,200 |
| 2 | திருமண நிதியுதவி உறுப்பினர்/ மகன்/மகள் ( இரண்டு முறை மட்டும்) | 5,000 |
| 3 | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இருமுறை மட்டும்) | |
| | அ) குழந்தை பிறப்பு | 6,000 |
| | ஆ) கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 4 | மூக்கு கண்ணாடி வாங்குவதற்கான நிதியுதவி (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டும்) | 1,500 |
| 5 | இயற்கை மரணச் செலவுகள் | 20,000 |
| 6 | ஈமச்சடங்கு செலவுகள் | 5,000 |
| 7 | விபத்து மரணச் செலவுகள் | 1,00,000 |

## 1.12 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைகளை போற்றி

பேணி பாதுகாத்து வளர்ப்பதற்கு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டு தமிழின் மூன்று வடிவங்களான இயல், இசை, நாடகம் ஆகியவற்றிற்கு அங்கீகாரம் தரும் வகையில் 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### 1.12.1 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணிகள்

- மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம் செய்தல்.
- கலைஞர்களின் கலைச் சேவைக்காக அவர்களுக்கு மாநில அளவில் கலைமாமணி விருது வழங்கும் திட்டத்தை செயல்படுத்துதல்.
- அகில இந்திய அளவில் கீழ்கண்ட மூன்று விருதுகள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல்
    - இலக்கியத்திற்கான பாரதி விருது,
    - இசைக்கான எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது
    - நடனத்திற்கான பாலசரஸ்வதி விருது.

- தொழில்முறை நாடகக் குழுக்கள் மற்றும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி அளித்தல்.
- பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல் மற்றும் அயல்நாடுகளில் பாரம்பரிய தமிழ் கலைகளைப் பரப்புதல்.
- இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்தல்.
- அரிய கலை நூல்களை பதிப்பித்திட நல்கை வழங்குதல்
- அரிய கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.

### 1.12.2 கலைமாமணி விருது

5 சவரன்(40 கிராம்) தங்க பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் ஒவ்வொரு கலைமாமணி விருதாளரருக்கும் வழங்கப்படுகின்றன. இதுவரை 1,924 கலைஞர்களுக்கு 'கலைமாமணி' விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.12.3 இதர பணிகள்

- நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1,00,000/– மதிப்பிலான பொற்கிழி வழங்குதல்.
- மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை ரூ.25,000/– குடும்ப பராமரிப்பு நிதியுதவியாக வழங்குதல்.
- நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/– நிதியுதவியாக வழங்குதல்.
- புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நல்கை வழங்குதல்.
- நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நல்கை வழங்குதல்.
- நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள், வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்த தொடர்வண்டி மற்றும் அரசுப் பேருந்துகளில் பயணிக்க பயணக் கட்டண சலுகை வழங்க பரிந்துரை செய்தல்.

## 1.13 தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

இது தமிழ்நாடு அரசு மற்றும் நான்கு தென்னக மாநிலங்கள், மூன்று யூனியன் பிரதேசங்கள் உதவியுடன் 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய அரசின் கலாச்சாரத் துறையின் ஒரு தன்னாட்சி அமைப்பு. இவ்வமைப்பு உறுப்பு மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

## 1.14 அறிவிப்புகள் 2022-2023 :-

1. சென்னை மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் 'நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலைவிழாக்கள் நடத்த ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்னையில் சனவரி 2023-ல் இக்கலை விழா நடத்தப்பட்டது. பிற நான்கு நகரங்களில் இந்த ஆண்டில் நடத்தப்படும்.

2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பல்வேறு நலத் திட்டங்களை பெறுவதற்கான இணையவழி சேவைகளை ரூ.20 இலட்சம் மதிப்பில் தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2023 டிசம்பர்–க்குள் நிறைவு செய்யப்படும்.

3. பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பல்வேறு இடங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தமிழ் நாட்டுப்புற மற்றும் செவ்வியல் கலைகளை வளர்ப்பதற்காக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 163 நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு இதுவரை 64 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் ஒரு தொடர் திட்டமாகும். மீதமுள்ள நிகழ்ச்சிகள் 2023 ஜூலை மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும்.

4. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் திறந்தவெளி அரங்கத்தை புதுப்பிக்க ரூ.1.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதுப்பிக்கும் பணி 2023 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

5. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி கட்டடங்களை மேம்படுத்த ரூ.97.80 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்பு பணிகள் 2023 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

6. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள பாரம்பரிய கட்டடத்தை புதுப்பிக்க ரூ.7.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2024 ஆகஸ்டு மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

7. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.15.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டடப்பணிகள் 2024 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

8. அரசு இசைக் கல்லூரிகள், இசைப்பள்ளிகள் மற்றும் சவகர் சிறுவர் மன்றங்களுக்கு புதிய கருவிகள், ஆய்வுக்கூட வசதிகள், மென்பொருட்கள் மற்றும் பிற வசதிகள் வழங்கி கற்பித்தலின் தரத்தினை நவீனப்படுத்தி மேம்படுத்திட ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023 டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

9. கடலூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட ரூ.1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2023 செப்டம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

10. சென்னை அரசு இசைக் கல்லூரியின் பாரம்பரிய கட்டடமான 'பிராடி கேசிலை' புதுப்பிக்க ரூ.2.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2024 டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

11. மாமல்லபுரம், அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரியின் சிற்பக்கலை அருங்காட்சியகத்தை மேம்படுத்தவும், விற்பனை மற்றும் காட்சிக் கூடம் அமைக்கவும் ரூ.49.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்பு பணிகள் 2023 மே மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

12. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகக் கட்டடம், கலைஞர்கள் தங்கும் விடுதி, படங்கள் காட்சிக்கூடம், கலையரங்கம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.1.54 கோடி நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரமைப்பு பணிகள் 2023 ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் சென்னை மற்றும் மற்ற பத்து மாவட்டங்களில் பொங்கல் கலை விழாக்கள் நடத்த ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்னை மற்றும் ஆறு மாவட்டங்களில் விழாக்கள் நடத்தப்பட்டன. எஞ்சிய நான்கு மாவட்டங்களில் 2023 மே மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும்.

14. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு நல்கையினை ரூ.3 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 1.15 சாதனைகள்:–

1. 'சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்

13.01.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. சென்னை மாநகரில் 18 இடங்களில் 14.01.2023 முதல் 17.01.2023 வரை 40–க்கும் மேற்பட்ட கலை வடிவங்களில் சுமார் 1000 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2. 'கலைச் சங்கமம்' என்னும் நாட்டுப்புறக் கலை மற்றும் செவ்வியல் கலை திருவிழா மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மக்கள் கூடும் பிற இடங்களில் வார இறுதி நாட்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

3. 23 நலிந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு ரூ.91.11 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கப்பட்டது.

4. மாவட்ட கலை விருதுகள் பெற்ற 500 கலைஞர்களுக்கு ரூ.70 இலட்சம் வழங்கப்பட்டது.
5. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் மூலம் பதிவு செய்யப்பட்ட 733 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களுக்காக ரூ.31.19 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.
6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கப்பட்டது.
7. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நலிந்த நிலையில் வாழும் 10 மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் பொற்கிழி நிதியுதவி ரூ.10 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

## 1.16 பிற சாதனைகள்:–

1. சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின் போது சென்னையில் ஏழு இடங்களில் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
2. சண்டிகர் 'தமிழ் சங்க சித்திரை விழா'–வில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
3. இந்திய விடுதலையின் 75வது ஆண்டை கொண்டாடும் வகையில் 'வேலு நாச்சியார்' நாட்டிய நாடகம் சென்னை மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டது.
4. முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
5. சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட 'புதுமைப் பெண் திட்டம்' விழாவில் 90 பெண் கலைஞர்கள் மற்றும் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

6. ஜெய்ப்பூர் 'தேசிய லோக்ரங் கலாச்சார விழா'–வில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
7. 'ஒன்றே பாரதம் ஒப்பிலா பாரதம்' திட்டத்தின் கீழ் ஜம்முவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
8. மலேசியாவில் உள்ள பழமையான இந்திய புலம்பெயர் சங்கங்கள் நிறுவப்பட்ட 75 ஆம் ஆண்டு விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
9. புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் மற்றும் மாநில சட்டமன்றத்தில் பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
10. சென்னை மற்றும் மாமல்லபுரத்தில் 31.01.2023 முதல் 02.02.2023 வரை நடைபெற்ற ஜி–20 கல்வி பணிக் குழுக்களுக்கான கூட்டங்களின் போது கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
11. சென்னையில் 'அயலகத் தமிழர் திருநாள்' கொண்டாட்டத்தின் போது கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

12. சென்னை, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், பழனி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் மற்றும் அரசு இசைக் கல்லூரிகளைச் சேர்ந்த 108 மாணவர்கள் குழுவால் செவ்வியல் குரலிசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
13. ஜனவரி 2023–இல் 'உலக மரபு வாரத்தின்' போது மதுரை, தஞ்சாவூர், மாமல்லபுரம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
14. பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தில் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
15. புதுதில்லி, சென்னை மற்றும் 20 மாவட்டத் தலைநகரங்களில் 'தமிழ்நாடு நாள்' விழா கொண்டாட்டங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
16. இந்திய நாட்டிய விழாவின் போது மாமல்லபுரத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

17. துபாயில் நடைபெற்ற உலகப் பொருளாதார உச்சி மாநாடு மற்றும் ஒன்பதாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
18. அரசு இசை, கவின் கலை மற்றும் கட்டடக்கலை & சிற்பக் கலை கல்லூரிகளில் முதன்முறையாக வளாக நேர்காணல் நடத்தப்பட்டு 173 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
19. சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் அரசு கவின் கலை மற்றும் கட்டடக்கலை சிற்பக்கலை கல்லூரி விரிவுரையாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.
20. சிறந்த வல்லுநர்கள் மூலம் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் இசைப் பள்ளிகளின் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.
21. சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம்

அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலை கல்லூரியில் மாணவர்களின் திறன்களை மேம்படுத்த 33 பயிலரங்குகளும், 6 கலை கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

22. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற மாணவர்களுக்காக தஞ்சாவூரில் மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி பட்டறையும், மதுரையில் மாநில அளவிலான குளிர்கால முகாமும் நடத்தப்பட்டன.

## 1.17 முடிவுரை

கலை மற்றும் பண்பாட்டுத் துறை கலைகளை ஊக்குவிக்கவும், கலைஞர்களுக்கு வாய்ப்புகளையும், பல்வேறு திட்டங்கள் மூலம் உதவிகளையும் வழங்கி அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்ய ஊக்கத்துடன் செயல்படுகிறது. பிரம்மாண்டமாக நிகழ்த்தப்படும் கலை நிகழ்ச்சிகள் மூலம் தமிழ்நாட்டின் கண்கவர் கலை வடிவங்கள் பெருமையுடன் உலகிற்கு காட்சிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளின்

திறமைமிக்க வல்லுநர்களைக் கொண்டு ஈடுபடுத்தி தரமான கலைக்கல்வியை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. கலை வடிவங்களை ஆவணப்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் வளமான பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாக்கும் பணியிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது.

## இணைப்பு

## 2022–2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள் | தென்காசி 02.04.2022 கன்னியாகுமரி 09.04.2022 விருதுநகர் 30.04.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.70 |
| 2 | மாவட்ட கலைப் போட்டிகள் | விருதுநகர் 16.04.2022 சிவகாசி 25.05.2022 தூத்துக்குடி 13.05.2022 தென்காசி 16.05.2022 முதல் 21.05.2022 கன்னியாகுமரி 17.06.2022 அழகுநாச்சியாபுரம் 20.07.2022 முதல் 22.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 3.50 |
| 3 | மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள் | மயிலாடுதுறை 16.04.2022 நாகப்பட்டினம் 17.04.2022 விழுப்புரம் 23.04.2022 தஞ்சாவூர் 09.05.2022 கள்ளக்குறிச்சி 21.05.2022 கடலூர் 06.06.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 8.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள் | திருவண்ணாமலை 22.04.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.35 |
| 5 | மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள் | திண்டுக்கல் 24.04.2022 சிவகங்கை 09.06.2022 மதுரை 10.06.2022 இராமநாதபுரம் 18.06.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 5.40 |
| 6 | 75வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | பெரம்பலூர் 24.04.2022 முதல் 27.04.2022 வரை கரூர் 26.05.2022 மற்றும் 30.05.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 1.85 |
| 7 | மாவட்ட கலை விழாக்கள் | நாகப்பட்டினம் 24.04.2022 கடலூர் 18.05.2022, 25.05.2022 முதல் 27.05.2022 வரை திருவாரூர் 31.05.2022 மயிலாடுதுறை 31.05.2022 தஞ்சாவூர் 04.06.2022, 28.06.2022, 30.06.2022, 15.07.2022 முதல் 18.07.2022 விழுப்புரம் 13.06.2022, 14.06.2022, 11.02.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 3.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கள்ளக்குறிச்சி 12.07.2022 முதல் 14.07.2022 | | |
| 8 | மாவட்ட இளைஞர் கலைப் போட்டிகள் | கோயம்புத்தூர் 08.05.2022 ஈரோடு 13.05.2022 திருப்பூர் 09.07.2022 ஊட்டி 10.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 5.40 |
| 9 | கோடை விழா | (கொடைக்கானல்) திண்டுக்கல் 23.05.2022 முதல் 31.05.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 2.43 |
| 10 | கோடை விழா | கோத்தகிரி நீலகிரி 07.05.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.00 |
| 11 | கோடை விழா | உதகை நீலகிரி 25.05.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 2.00 |
| 12 | கோடை விழா | (ஏற்காடு) சேலம் 29.05.2022 & 31.05.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 |
| 13 | மாங்கனி விழா | கிருஷ்ணகிரி 06.07.2022 09.07.2022 10.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 |
| 14 | தமிழ்நாடு நாள் விழா | சென்னை 18.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் | 5.35 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | ஆடி கிருத்திகை விழா | திருவள்ளூர் (திருத்தணி) 23.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.65 |
| 16 | உலக செஸ் ஒலிம்பியாட் | மதுரை 25.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.85 |
| 17 | உலக செஸ் ஒலிம்பியாட் | சென்னை 26.07.2022 & 28.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.56 |
| 18 | வல்வில் ஓரி விழா | நாமக்கல் 02.08.2022 & 03.08.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 |
| 19 | ஆடிப்பெருக்கு விழா | ஒகேனக்கல் (தருமபுரி மாவட்டம்) 02.08.2022 முதல் 04.08.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 |
| 20 | ஆடிப்பெருக்கு விழா (கலைச் சங்கமம்) | ஈரோடு 03.08.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.25 |
| 21 | குற்றால சாரல் திருவிழா 2022 | தென்காசி 05.08.2022 முதல் 12.08.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 4.50 |
| 22 | சுதந்திர தின விழா | பவானிசாகர், ஈரோடு மாவட்டம் 15.08.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.00 |
| 23 | புத்தக திருவிழா | மதுரை 26.09.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.40 |
| 24 | கலைச் சங்கமம் | நீலகிரி 27.09.2022 கள்ளக்குறிச்சி 19.12.2022 கோயம்புத்தூர் 11.01.2023 தஞ்சாவூர் 25.01.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி | 3.75 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 29.01.2023 திருப்பூர் 27.01.2023 பெரம்பலூர் 28.01.2023 & 29.01.2023 | | |
| 25 | மாநில அளவில் கைவினை முகாம் | தஞ்சாவூர் 01.10.2022 முதல் 05.10.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர். | 4.00 |
| 26 | நவராத்திரி விழா | இராமநாதபுரம் 03.10.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை. | 0.35 |
| 27 | ராஜ ராஜ சோழன் சதய விழா | மயிலாடுதுறை 2.11.2022 முதல் 3.11.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர். | 1.50 |
| 28 | மாவட்ட கலை விழாக்கள் | இராணிப்பேட்டை 17.12.2022 திருவள்ளூர் 17.12.2022 செங்கல்பட்டு 22.12.2022 காஞ்சிபுரம் 23.12.2022 முதல் 31.12.2022 திருப்பத்தூர் 30.12.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம். | 9,5 |
| 29 | மண்டல அளவில் கலைக் கண்காட்சி | திருவாரூர் 13.12.2022 & 14.12.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.00 |
| 30 | குளிர்கால பயிற்சி முகாம் | மதுரை 24.12.2022 முதல் 01.01.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 4.00 |
| 31 | மார்கழி இசை விழா | ஸ்ரீரங்கம் 30.12.2022 முதல் | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி, | 11.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 01.01.2023 மதுரை 02.01.2023 காஞ்சிபுரம் 04.01.2023 விருதுநகர் 08.01.2023 சேலம் 25.02.2023 | மதுரை, காஞ்சிபுரம், திருநெல்வேலி, சேலம் | |
| 32 | தை பூசம் விழா | திண்டுக்கல் 02.02.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 3.00 |
| மொத்தம் | | | | 94.61 |

## தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள், (2022–2023)

| வ. எ ண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்து னர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டி | சென்னை 28.07.2022 | தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 2.62 |
| 2. | வைகுந்த ஏகாதசி விழா | திருச்சிராப்பள்ளி 31.12.2022 & 01.01.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள் ளி | 3.00 |
| 3. | சென்னை சங்கமம் –நம்ம ஊரு திருவிழா | சென்னை 14.01.2023 முதல் 17.01.2023 வரை | தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 4.00 |
| 4. | களியூரன் காவிரி | திருச்சிராப்பள்ளி 10.01.2023 & 12.01.2023 | தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | வயலூர் கிராம கோவில் திருவிழா | காஞ்சிபுரம் 30.01.2023 & 31.01.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம். | 1.50 |
| 6. | மஹா சிவராத்திரி விழா | நெடுங்குடி 18.02.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 1.00 |
| 7. | திருவேணி சங்கமம் கலை விழா | கன்னியாகுமரி 04.03.2023 & 05.03.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 4.00 |
| 8. | வசந்த விழா 2023 | சென்னை 06.03.2023 முதல் 09.03.2023 | தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் பல்கலைக் கழகம் | 3.75 |
| 9. | கோடை விழா 2022 | 19.05.2022 முதல் 31.05.2022 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 5.86 |
| மொத்தம் | | | | 26.93 |

## மாநிலங்களுக்கிடையேயான கலை நிகழ்ச்சிகள் (2022–2023)

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | சித்திரைத் திருவிழா | சண்டிகர் 28.05.2022 முதல் 01.06.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 3.00 |
| 2. | LBSNAA, உத்தரகாண்ட் | முசௌரி 21.07.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.14 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | தேசிய லோக்ராங் கலை திருவிழா | ஜெய்ப்பூர் 17.10.2022 மற்றும் 18.10.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 9.90 |
| 4 | ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம் | ஜம்மு–காஷ்மீர் 13.11.2022 முதல் 15.11.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 15.00 |
| 5 | பொங்கல் கலை விழா | தமிழ்நாடு இல்லம், புதுதில்லி 14.01.2023 மற்றும் 15.01.2023 புதுதில்லி சட்டமன்றம் 17.01.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர். | 4.34 |
| மொத்தம் | | | | 33.38 |

## வெளிநாடுகளில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் (2022–2023)

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | பாரம்பரிய கலை நிகழ்ச்சி | மலேசியா (சபா, சார்வாக்) 03.12.2022 முதல் 06.12.2022 | இந்திய தூதரகம், மலேசியா | 13.00 |
| 2. | நாட்டுப்புற & செவ்வியல் கலை நிகழ்ச்சி | துபாய் 18.03,2023, 19.03.2023 | உலகப் பொருளாதார உச்சி மாநாடு மற்றும் ஒன்பதாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு, மெட்ராஸ் டெவலப்மென்ட் சொசைட்டி | 11.50 |
| மொத்தம் | | | | 24.50 |

## மாவட்ட கலை விருதுகள் (2022–2023)

| வ. எண் | மண்டலங்கள் | மாவட்டம் | விருதுக்கான வருடம் | விருது பெறுபவர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | சென்னை | 2021–2022 | 15 | 2.10 |
| | | திருவள்ளூர் | 2016–2017 முதல் 2018 –2019, 2021–2022 | 30 | 4.05 |
| | | இராணிப் பேட்டை | 2021–2022 | 15 | 2.10 |
| | | செங்கல்பட்டு | 2021–2022 | 15 | 2.10 |
| | | திருப்பத்தூர் | 2021–2022 | 15 | 2.10 |
| | | காஞ்சிபுரம் | 2021–2022 | 15 | 2.10 |
| 2 | சேலம் | தருமபுரி | 2022–2023 | 15 | 2.10 |
| | | கிருஷ்ணகிரி | 2022–2023 | 15 | 2.10 |
| | | நாமக்கல் | 2022–2023 | 15 | 2.10 |
| 3 | கோயம்புத்தூர் | ஈரோடு | 2021–2022 | 15 | 2.10 |
| | | திருப்பூர் | 2018–2019, 2021–2022 | 20 | 2.85 |
| | | நீலகிரி | 2018–2019 | 5 | 0.75 |
| | | கோயம்புத்தூர் | 2021–2022 | 15 | 2.10 |
| 4 | தஞ்சாவூர் | திருவாரூர் | 2021–2022 | 15 | 2.10 |
| | | நாகப்பட்டினம் | 2021–2022 | 15 | 2.10 |
| | | கடலூர் | 2021–2022 | 15 | 2.10 |
| | | விழுப்புரம் | 2021–2022 | 15 | 2.10 |
| | | கள்ளக் குறிச்சி | 2021–2022 | 15 | 2.10 |
| 5 | திருச்சிராப் பள்ளி | திருச்சிராப் பள்ளி | 2021–2022 | 15 | 2.10 |
| | | கரூர் | 2021–2022 | 15 | 2.10 |
| | | புதுக் கோட்டை | 2021–2022, 2022–2023 | 30 | 4.20 |
| 6 | மதுரை | தேனி | 2021–2022 | 15 | 2.10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **திண்டுக்கல்** | 2021–2022 | 15 | 2.10 |
| | | **சிவகங்கை** | 2021–2022 | 15 | 2.10 |
| | | **இராமநாதபுரம்** | 2018 – 2019, 2021–2022 | 20 | 2.85 |
| | | **மதுரை** | 2018 – 2019, 2021–2022 | 20 | 2.85 |
| 7 | **திருநெல்வேலி** | **திருநெல் வேலி** | 2021–2022 | 15 | 2.10 |
| | | **தூத்துக்குடி** | 2021–2022 | 15 | 2.10 |
| | | **விருதுநகர்** | 2021–2022 | 15 | 2.10 |
| | | **கன்னியா குமரி** | 2021–2022 | 15 | 2.10 |
| | | **தென்காசி** | 2021–2022 | 15 | 2.10 |
| | | | **மொத்தம்** | 400 | 70.05 |




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.01.2023 அன்று சென்னை, தீவுத்திடல் மைதானத்தில் "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" என்ற பிரம்மாண்ட நாட்டுப்புறக் கலை விழாவை தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.10.2022 அன்று இசைக்கருவிகள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதற்கு 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/-க்கான காசோலைகளை வழங்கினார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.08.2022 அன்று சென்னையில் முதல் பெண் சுதந்திரப் போராட்ட வீரமங்கை வேலுநாச்சியாரின் வாழ்க்கையை சித்தரிக்கும் பிரம்மாண்ட நாட்டிய நாடகத்தை தொடங்கி வைத்தார்கள்.




மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் 17.09.2022 அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் “கலைச்சங்கமம்” எனும் நாட்டுப்புற மற்றும் செவ்வியல் கலை வடிவங்கள் திருவிழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.



18.07.2022 அன்று தமிழ்நாடு நாள் கொண்டாட்டத்தின் போது
சென்னையில் கலை நிகழ்ச்சி நடத்தப் பெற்றது.



27.07.2022 அன்று சென்னையில் செஸ்ஒலிம்பியாட் வீரர்களை வரவேற்கும் வகையில் பாரம்பரிய நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



28.07.2022 அன்று சென்னையில் செஸ் ஒலிம்பியாட் வீரர்களை வரவேற்கும் வகையில் நாட்டுப்புற நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



13.08.2022 அன்று சென்னையில் நடைபெற்ற வீரமங்கை வேலுநாச்சியாரின் வாழ்க்கையை சித்தரிக்கும் நடன நாடகம்.




31.01.2023 முதல் 02.02.2023 வரை சென்னையில் நடைபெற்ற G20 முதல் கல்விப் பணிக்குழு கூட்டத்திற்காக கலை நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன.




01.02.2023 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற கலாச்சார நிகழ்ச்சியில்
G20 பிரதிநிதிகள் பங்கேற்பு.

# அருங்காட்சியகங்கள் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023-2024

## 2. முன்னுரை

அருங்காட்சியகங்கள் மனித வரலாறு மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றின் மதிப்புமிக்க சேகரிப்புகள், அழகியல் காட்சியமைப்பு மற்றும் பிரம்மாண்ட கண்காட்சிகள் மூலம் வருங்கால சந்ததியினருக்கு நம்முடைய பண்பாட்டு பாரம்பரியத்தை அறிமுகப்படுத்துகின்றன. பல்வேறு கலாச்சார வரிசைகளில் கிடைக்கப்பெற்ற பொருள் ஆதாரங்களை அங்கீகரித்து காட்சிப் படுத்துவதன் மூலம், நமது கடந்தகால வரலாற்றின் மதிப்பை வளர்ப்பதோடு, அனுபவக் கற்றலை ஊக்குவிக்கும் கல்வி நிறுவனங்களாகவும் செயல்படுகின்றன. வரலாற்றில் அருங்காட்சியகங்கள் சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சியின் குறிகாட்டிகளாக விளங்குகின்றன.

அதே நேரத்தில், தங்கள் பார்வையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அவை தம் முதன்மை நோக்கத்திலும் கவனம் செலுத்துகின்றன.

## 2.1. துறையின் நோக்கங்கள்


அருங்காட்சியகங்கள் தாம் சேகரித்த அரும்பொருட்களை பகுப்பமைத்து, பாதுகாப்பதோடு, வருகை தரும் பார்வையாளர்களுக்கு நம் கலாச்சார வரலாற்றைப் பற்றி உரிய காட்சியமைப்பின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அருங்காட்சியகத் துறையின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. அரும்பொருட்களை சேகரித்தல்.
2. சந்ததியினருக்காக காட்சிப் பொருட்களைப் பாதுகாத்தல்.
3. சேமிப்பு மற்றும் ஆவணப்படுத்துதல்
4. ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றை பார்வையாளர்களுக்கு அறியத் தருதல்.

5. கருத்தியல் சார்ந்த (Theme Based) காட்சியமைப்பு மற்றும் சிறப்பு கண்காட்சிகள் மூலம் பொதுமக்களின் பார்வைக்காக சேகரிப்புகளைக் காட்சிப்படுத்துதல்.
6. கல்விப் பணிகளை நடத்துதல்

## 2.2. நிருவாக அமைப்பு

அருங்காட்சியகங்களின் இயக்குநர் சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களின் தலைமை பொறுப்பில் உள்ளார். உதவி இயக்குநர்கள் (தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள், வழிகாட்டிகள், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டு துறை நிருவகிக்கப்படுகிறது.




## 2.3 அரசு அருங்காட்சியகம், சென்னை

இந்தியாவின் இரண்டாவது மிகப்பழமையான சென்னை அரசு அருங்காட்சியகமானது 1857–ல்

துவங்கப்பட்ட ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாகும். ஏழு கட்டடங்களில், 57 காட்சிக் கூடங்களில், கலை, தொல்லியல், நாணயவியல், மானுடவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் உள்ளிட்ட பிரிவுகளைச் சேர்ந்த கலைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. கல்வி, வடிவமைப்பு, காட்சியமைத்தல் மற்றும் வேதியப் பாதுகாப்பு தொடர்பான பிரிவுகள் இந்த காட்சிக் கூடங்களுக்கு துணையாக பணிபுரிகின்றன. உலகப் புகழ் பெற்ற வெண்கலப் படிமங்கள், அமராவதி சுண்ணாம்புக் கற்சிற்பங்கள், ராபர்ட் புரூஸ்ஃபுட் வரலாற்றுக்கு முந்தைய தொகுப்புகள், ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலத் தொகுப்புகள், தஞ்சாவூர் ஆயுதக் கிடங்கு, பல்வேறு வம்சங்களின் நாணயங்கள், ரோமானியப் பழங்காலச் சின்னங்கள், புதைப்படிவங்கள், 60 அடி நீளமுள்ள நீலத்திமிங்கலத்தின் எலும்புக்கூடு, இராஜா இரவிவர்மா ஓவியங்கள் போன்றவை சென்னை அருங்காட்சியகத்தில் பெருமையுடன்

வைக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற சேகரிப்புகளுள் சிலவாகும். இங்குள்ள புவியியல் காட்சியகம் மற்றும் சிறுவர் அருங்காட்சியகத்தில் உள்ள ஊடாடும் கண்காட்சிகள் மற்றும் உயிரளவு இயங்கு மாதிரிகள், குழந்தைகளை கவர்கின்றன.

**2.4. மாவட்ட அருங்காட்சியகங்கள்**

புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர், ஆண்டிப்பட்டி, திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் 23 மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் தமிழக அரசின் அருங்காட்சியகத் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு அருங்காட்சியகங்கள்

அரசுக்கு சொந்தமான பாரம்பரிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

## 2.5. பல்வேறு பணிகளின் விவரங்கள்

- ❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தை மேம்படுத்தவும், புராதன கட்டடத்தை ரூ.6 கோடி செலவில் புதுப்பிக்கவும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு, புனரமைப்புப் பணிகள் பொதுப்பணித்துறையின் மூலம் நடை பெறுகின்றன.
- ❖ ரூ5.41 கோடி செலவில் பாந்தியன் பாரம்பரிய கட்டடத்தின் (கி.பி. 1780–ல் கட்டப்பட்டது) மறுசீரமைப்பு மற்றும் காட்சிக் கூடங்களை புதுப்பிக்கும்பணி நடைபெற்று வருகிறது.
- ❖ தற்போதுள்ள பழைய புராதன கட்டடத்தை மாற்றியமைப்பதன் மூலம் பாரம்பரிய கட்டடத்தை மீட்டமைத்து அதில் சிற்றுண்டிச் சாலையை

நிறுவும் பணி ரூ.2.81 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

- ❖ புதிய நிர்வாக அலுவலகக் கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலுக்கான பணிகள், ரூ.4.80 கோடி செலவில் பொதுப்பணித்துறை மூலம் நடைபெற்று வருகின்றன.
- ❖ அரசு ஆணை மூலம் ரூ.90 லட்சம் மதிப்பீட்டில், அரியலூரில் உள்ள புதைப்படிவ அருங்காட்சியகத்தில், புதைப்படிவ நிலங்களை பாதுகாக்கும் வகையில் அவ்விடத்தின் இருபுறமும் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.
- ❖ விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு அருங்காட்சியகம் அமைப்பதற்காக பொதுப்பணித்துறையால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

- ❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் தரம் உயர்த்த விரிவான திட்டஅறிக்கை கட்டட வடிவமைப்பாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- ❖ சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள படிமக்கூடம் சர்வதேச தரத்திற்கு இணையாக ரூ.7 கோடியில் மேம்படுத்துவதற்கு கட்டட வடிவமைப்பாளரால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ ரூ.3 கோடி செலவில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள அருங்காட்சியகத் திரையரங்கில் (பாரம்பரிய கட்டடம்) குளிரூட்டிகளை சரிசெய்தல் மற்றும் நீர்க்கசிவைத் தடுத்து நிறுத்துதல் போன்ற பணிகள் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெறுகின்றன.

❖ காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்தினை, ரூ.2 கோடி செலவில் நவீன காட்சி மற்றும் ஊடாடும் கண்காட்சிகளுடன், அருள்மிகு ஏகாம்பரநாதர் கோவிலின் புதிய சுற்றுலா விளக்க மைய கட்டடத்திற்கு மாற்றியமைப்பதற்காக விரிவான திட்டஅறிக்கை தயாரிக்கப்பட்டு பொதுப்பணித் துறையின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது.

❖ நாகப்பட்டினத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம், பாரம்பரிய கட்டடத்திற்கு மாற்றி, புதிய காட்சி அமைப்புகளுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

❖ சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வேதியப் பாதுகாப்பு ஆய்வகத்தில் ரூ.50 லட்சம் மதிப்பிலான நவீன உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன. இரண்டு முழுநேர

ஆய்வக உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு, ஜனவரி மாதம் முதல் பணிபுரிந்து வருகின்றனர்.

❖ ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் சென்னை அரசு அருங்காட்சியகம் முன்புறமுள்ள மணற் கல்லாலான மரபுச்சுவரைப் பழுதுபார்த்து புதுப்பிக்கும் பணி பொதுப்பணித் துறை மூலம் நடைபெற்று வருகிறது.

❖ தேசிய கலைக் கூடத்தின் மீது ரூ.8 கோடி மதிப்பீட்டில் முப்பரிமாண லேசர் ப்ரொஜெக்க்ஷன் மேப்பிங் (3D Laser Projection Mapping) பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள், கோரப்பட்டுள்ளது

### 2.6 சிறப்பு நிகழ்வுகள்

❖ ஆகஸ்ட் 15, 2022 அன்று, இந்திய சுதந்திர தினத்தில் 75 வது ஆண்டு நினைவாக, அருங்காட்சியக வளாகத்தில், மகாத்மா காந்தி

சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் திறந்து வைத்து, தமிழக சுதந்திர இயக்கம் குறித்த சிறப்பு கண்காட்சியைத் துவக்கி வைத்தார்கள்.

- ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் உள்ள லிண்டன் அருங்காட்சியகத்தில் தமிழ் கலாச்சாரத்தின் பாரம்பரியம் மற்றும் வரலாற்றை அறிமுகப்படுத்தும் "அகம்–புறம்" என்ற தலைப்பில் ஆறு மாத கண்காட்சி தொடங்கப்பட்டது, இக்கண்காட்சியானது 3000 ஆண்டுகால "காதலும் போரும்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் தமிழர் நாகரிகத்தின் வரலாற்றைக் காட்டுகிறது.

### 2.6.1. சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் மற்றும் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் உள்ள லிண்டன் அருங்காட்சியகம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மற்றும் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய

அறநிலையத்துறை முதன்மைச் செயலாளர் ஜெர்மனிக்கு பயணம் மேற்கொண்டனர். 07.10.2022 அன்று சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் மற்றும் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் உள்ள லிண்டன் அருங்காட்சியகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

❖ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சில நோக்கங்கள் பின்வருமாறு:

1. லிண்டன் அருங்காட்சியகம் மற்றும் சென்னை அரசு அருங்காட்சியகம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டங்களில் அறிஞர்களின் ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி மேம்பாடு.
2. மாநாடுகள், கருத்தரங்குகள், வசிப்பிட (Residencies) திட்டங்கள் மற்றும் பரிமாற்றங்கள் அல்லது கண்காட்சிகள்

போன்ற கூட்டுக் கல்வி நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்.

3. பொதுவான ஆர்வத்துக்குரிய பொருட்கள் மற்றும் வெளியீடுகளின் பரிமாற்றம்.

**2.7. வெளியீடுகள்**

சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகம் பதிப்பிக்கும் அருங்காட்சியகவியல், தொல்லியல், மானிடவியல், கலை, தாவரவியல், புவியியல், விலங்கியல், நாணயவியல், கலைப்பொருட்களின் வேதியியப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் புத்தகங்கள் மற்றும் பட்டியல்கள் பல வெளியீடுகள் சர்வதேச அருங்காட்சியகங்களால் வெளியிடப்பட்ட சிறந்த புத்தகங்களுக்கு இணையானவை. அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலுள்ள தொல் பொருட்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியின் விளைவாக, அவை உலகிற்கு குறிப்பு புத்தகங்களாக சேவையாற்றுகின்றன.

## 2.8. அருங்காட்சியகத் துறையில் சமீபத்திய சேகரிப்புகள்

2022–2023 ஆம் ஆண்டில், அருங்காட்சியகத் துறையானது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு வெண்கலங்கள் மற்றும் கற்சிற்பங்களை சேகரித்துள்ளது.

### 2.8.1. அரசு அருங்காட்சியகம், சென்னை

சென்னை அரசு அருங்காட்சியகம் 06.04.2023 அன்று விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டம், கூனிமேடு கிராமத்திலிருந்து, நின்ற நிலையில் சிவன், பார்வதி, தேவி, கணேசர் வெண்கலபடிமங்கள், உடைந்த செம்புப் பாத்திரங்கள், பானை, திருவாட்சி, போன்ற பல்வேறு புதைப் பொருட்களைப் பெற்றது. காஞ்சிபுரம் மாவட்டம் மாகரல் கிராமத்திலிருந்து விஜயநகர காலத்து 106 பொற்காசுகள் புதைப்பொருளாக கிடைத்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தாலுக்கா, வேடப்பாளையம் கிராமத்திலிருந்து நகை, காது மடல் போன்ற தங்க ஆபரணங்கள் கிடைத்தன.

அருங்காட்சியக பார்வையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 700 மெகாவாட் பிஎச்ஆர்ஜ அணுமின்நிலைய மாதிரியை, இந்திய அணுசக்தி கழகம் லிமிடெட் மும்பை, சென்னை அருங்காட்சியகத் துறையிடம் ஒப்படைத்தது. 23.06.2022 அன்று நடைபெற்ற விழாவில், அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அருங்காட்சியக இயக்குநர் ஆகியோர் மாதிரியைப் பெற்றுக் கொண்டனர்.

**2.8.2. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்**

விருதுநகர் அருங்காட்சியகத்தில் மகாவீரர், முருகன், கருப்பண்ணசாமி, தலையில்லாத ஆண் உருவம், நாகர், அம்மன், சதிக்கல், பீடத்துடன் கூடிய பெருமாள், ராகவேந்திரர், பித்தளைப் பெருமாள் சிலைகள் புதைப்பொருட்களாகப் பெறப்பட்டன. திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் சண்டிகேஸ்வரர், கோமுகம், நந்தி, சிவலிங்கம் மற்றும் தீர்த்தங்கரர் கற்சிலைகள் பெறப்பட்டன. அரியலூர்

மாவட்ட அருங்காட்சியகத்திற்கு சூரியன் கற்சிற்பம் கிடைத்தது. வேலூர் மாவட்ட அருங்காட்சியகத்துக்கு விஷ்ணு கற்சிற்பமும், காஞ்சிபுரம் மாவட்ட அருங்காட்சியகத்துக்கு ஜேஷ்டா கற்சிற்பமும் கிடைத்தன.

**2.9 கல்விச் செயல்பாடுகள்**

அரசு அருங்காட்சியகங்கள் துறை மாணவர்கள், ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பல்வேறு கல்வி நிகழ்வுகளை வழக்கமாக நடத்தி வருகிறது. கருத்தரங்குகள், பயிற்சி அமர்வுகள், பட்டறைகள் மற்றும் விரிவுரைகளை அருங்காட்சியகங்கள் துறை தொடர்ந்து செயல்படுத்துகின்றது. ஒவ்வொரு ஆண்டும், அருங்காட்சியகம் மற்றும் அதன் அரும்பொருட்களைப் புரிந்து கொள்வதற்கும், மாணவர்களை ஊக்குவிக்கவும் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவ்வருங்காட்சியகம் ஆராய்ச்சியாளர்கள், முதுகலை

மற்றும் இளங்கலை மாணவர்களுக்கு அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளில் உதவுவதற்கும் அவர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கும் உள்விளக்க பயிற்சி வழங்குகிறது. சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்கள் மூலம் மாநிலத்தில் 75 கல்லூரிகளைச் சேர்ந்த 3153 மாணவர்கள் தொல்லியல், மானிடவியல், கலை, நாணயவியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் புவியியல் போன்ற அறிவியல் பிரிவுகளில் உள்விளக்கப் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 2.9.1 சென்னை அரசு அருங்காட்சியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி நிகழ்ச்சிகள்:

- உலக பாரம்பரிய தினம் 18.04.2022 அன்று கொண்டாடப்பட்டது. அறிவுக் கண்பதிப்பகத்தின் ஒருங்கிணைப்பில் 300 கல்லூரி மாணவர்களுக்கு பாரம்பரிய நடைப்பயிற்சி நடத்தப்பட்டது.
- சர்வதேச அருங்காட்சியக தினம் 18.05.2022 அன்று கொண்டாடப்பட்டது. சென்னை

மாநகரில் உள்ள கல்லூரி மாணவர்களுக்காக 'அருங்காட்சியகங்களில் கல்வெட்டுகளின் பங்கு' என்ற தலைப்பில் விரிவுரை நடத்தப்பட்டது.

- "சுற்றுச் சூழல் தினம்" 01.06.2022 அன்று கொண்டாடப்பட்டது. 'சுற்றுச்சூழல் கல்வியில் அருங்காட்சியகங்களின் பங்கு' என்ற தலைப்பில் ஒரு விரிவுரையும், அதனைத் தொடர்ந்து அருங்காட்சியக வளாகத்தில் மரங்கள் நடும் நடைப்பயணமும் (Tree Walk) ஏற்பாடு செய்யப்பட்டன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2022 அன்று 'சுதந்திர போராட்டத்தில் தமிழகம்' என்ற காந்தியின் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள்.
- 'காந்தி ஜெயந்தி'–ஐ முன்னிட்டு சிறப்பு புகைப்படக் கண்காட்சி 01.10.2022 அன்று நடைபெற்றது. சென்னை அரசு

அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 153 குழந்தைகள் காந்தி வேடமணிந்து பங்கேற்றனர்.

- 15.01.2023 அன்று பொங்கல்விழா சிறப்பு நிகழ்ச்சியுடன் ரங்கோலி போட்டி நடத்தப்பட்டது. நுழைவு வாயிலில் 15 அடி உயர பொங்கல் பானை மற்றும் ஜல்லிக்கட்டு மாதிரிகள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன, இவை பார்வையாளர்களை "செல்ஃபி ஸ்பாட்களாக" (Selfie spots) ஈர்த்தன.
- 22.2.2023 மற்றும் 4.3.2023 ஆகிய தேதிகளில் 'கன்சர்வேஷன் கான்க்ளேவ்' (Conservation Conclave), CSMVS (சத்ரபதி சிவாஜி மகாராஜ் வாஸ்து சங்க்ரஹாலயா), மும்பை மற்றும் குஜராத்தின் புஜ்–ல் உள்ள ஸ்மிருதிவன் அருங்காட்சியகத்தில் நடைபெற்ற 'அருங்காட்சியக பினாலே' ஆகியவற்றில்

காப்பாட்சியர்கள் குழு விவாதங்களில் பங்கேற்றனர்.

- சென்னையில் உள்ள 5 கல்லூரிகளைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு தொல்லியல் பிரிவில் 07.03.2023 மற்றும் 08.03.2023 ஆகிய இரண்டு நாட்கள் கல்வெட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 2.9.2. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்

மாவட்ட அருங்காட்சியகங்களில் உலக பாரம்பரிய தினம், சர்வதேச அருங்காட்சியக தினம், உலக சுற்றுலா தினம், யோகா தினம், சுதந்திர தினம், குடியரசு தினம், உலக சுற்றுச்சூழல் தினம், தேசிய அறிவியல் தினம், குழந்தைகள் தினம், தபால் தலை நாள் போன்ற சிறப்பு நினைவு தினங்கள் கொண்டாடப்பட்டன. பார்வையாளர்கள் மற்றும் மாணவர்களை கவரும் வகையில் போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடைப்பயிற்சிகள், பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. மேலும், கல்வெட்டுகள் மற்றும் பனை

ஓலைகளை பாதுகாத்தல் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. சில நிகழ்வுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- ❖ சர்வதேச அருங்காட்சியக தினமான 18.05.2022 அன்று, ஈரோடு அருங்காட்சியகம், "உலகிலிருந்து உள்ளூர் வரை" என்ற தலைப்பில், உலகம், இந்தியா மற்றும் தமிழகத்தின் முதல் அருங்காட்சியகங்களை சிறப்பிக்கும் வகையில் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை நடத்தியது.
- ❖ 26–06–2022 அன்று திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் 'நவீன இலக்கியத்தில் பாரதியின் தாக்கம்' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட 160 பேர் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

❖ தேசிய புத்தகக் கண்காட்சி திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தால் 18–06–2022 முதல் 30–06–2022 வரை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் உடன் இணைந்து நடத்தப்பட்டது. தினமும் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

❖ ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் 15.08.2022 அன்று "சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்ப்பெண்கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கண்காட்சி 75வது சுதந்திரதினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது.

❖ ஜே.கே.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இறுதியாண்டு வரலாற்று மாணவர்களுக்காக, ஈரோடு கஸ்தூரி அரங்கநாதர் கோயில், பெரியார் நினைவு இல்லம், பாரதியார் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு களப்பயணம் நடத்தப்பட்டது.

❖ சேலம் அருங்காட்சியகத்தில், சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய ஓவியக் கண்காட்சி 15-08-2022 அன்று நடத்தப்பட்டது. 23-11-2022 அன்று பனை ஓலைச் சுவடிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விரிவுரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ உலக யானைகள் தினத்தன்று (12-08-2022), நெல்லையப்பர் கோவிலில் உள்ள யானை சிற்பங்கள் கூறும் கதைகளை விளக்கும் பயிற்சி திருநெல்வேலி அருங்காட்சியகம் மூலம் பள்ளி மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. யானைச் சிற்பங்களை வரைவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

❖ வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஓவியப் போட்டியில் 62 பள்ளிகளைச் சேர்ந்த 186 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

❖ மதுரை மற்றும் சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகங்களால், மதுரை லேடி டோக் கல்லூரியில் விலங்கியல் துறைக்காக மூன்று நாட்கள் டாக்ஸி டெர்மி(Taxidermi) பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. 16.03.2023 முதல் 18.03.2023 வரை நாற்பது மாணவர்களும் ஏழு ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

## 2.10. முடிவுரை

அருங்காட்சியகங்கள் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைக்கும் பாதையாகும். சென்னையிலுள்ள அருங்காட்சியகமானது, பார்வையாளர்களுக்கு உகந்த சூழலை வழங்குவதன் மூலம் நமது வளமான கலாச்சார பாரம்பரியத்தைப் பற்றி பொதுமக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கும் மகிழ்விப்பதற்குமான அதன் நோக்கத்தில் புதிய பாதையை படைக்கிறது. இவ்வருங்காட்சியகம் ஆக்மென்டட் ரியாலிட்டி, 3டி ப்ராஜெக்ஷன் மேப்பிங், விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் சைகை

அடிப்படையிலான காட்சிவடிவமைப்பு போன்ற நவீன தொழில் நுட்பங்களுடன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வருகிறது. அருங்காட்சியகத் துறை இத்தகைய தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பின்பற்றுவதன் மூலம், கலாச்சாரம், வரலாறு மற்றும் பாரம்பரியத்திற்கும் எதிர்கால சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் பங்களிக்கிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.8.2022 அன்று வளர்கலைக் கூடத்தில், உள்ள டி.பி.ராய் சௌதரி அவர்களால் உருவாக்கப்பட்ட காந்தி சிலையை பார்வையிடுகிறார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2022 அன்று வளர்கலைக் கூடத்தில் 'சுதந்திர போராட்டத்தில் தமிழகம்' என்ற புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.




700 மெகாவாட் பிஎச்ஆர்ஜ அணுமின் நிலைய மாதிரியை, இந்திய அணுசக்தி கழகம் லிமிடெட் மும்பை, சென்னை அருங்காட்சியகத் துறையிடம் 23.06.2022 அன்று ஒப்படைத்தது.



மதுரை மற்றும் சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகங்களால் மதுரை லேடி டோக் கல்லூரியில் 16.03.2023 முதல் 18.03.2023 வரை டாக்ஸிடெர்மி பட்டறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.



காஞ்சிபுரம் மாவட்டம் மாகரல் கிராமத்தில் இருந்து விஜயநகர காலத்து 106 பொற்காசுகள் புதைபொருளாக கிடைத்துள்ளது.



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு 1.10.2022 அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தமிழகம் முழுவதும் இருந்து 153 குழந்தைகள் காந்தி வேடமணிந்து பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தாலுக்கா, வேடப்பாளையம் கிராமத்தில் இருந்து நகை, காது மடல் போன்ற தங்க ஆபரணங்கள் கிடைத்தன.



சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 06.04.2023 அன்று விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுக்கா, கூனிமேடு கிராமத்தில் இருந்து பெறப்பட்ட புதைப் பொருட்கள்.

# தொல்லியல் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023–2024

## 3. முன்னுரை

தொல்லியல் என்பது பல்துறை செயல்பாடுகள் தொடர்பான பிரிவு. மேலும் ஒரு பகுதியின் வரலாற்றுச் சிறப்பினை மறுகட்டுமானம் செய்யவும் முக்கிய பங்கு வகிக்கிறது. தொல்லியல் கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கப்படுகின்ற அரிய தொல் பொருட்களைக் கொண்டு இக்கால சமுதாய, அரசியல் மற்றும் கலாச்சார நிலைகளுக்கான ஆதாரங்களை வெளிக்கொணர உதவுகிறது. மேலும், தொல்லியல் என்பது படிமங்கள், தொல் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகிய எச்சங்களை கொண்டு பண்டைய மனித வாழ்வு மற்றும் அவர்களின் செயல்பாடுகள் குறித்த அறிவியல் சார்ந்த கல்வி ஆகும். Archaeology என்ற கிரேக்கச் சொல்லில்,

Archaeos என்பதற்கு "பண்டைய" எனவும், Logos என்பதற்கு "கற்றல், கலந்துரையாடல், காரணம் அல்லது அறிவியல்" எனவும் பொருள் கூறலாம்.

### 3.1. துறையின் நோக்கங்கள்

மாநில தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக 1961–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது:–

- பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.
- மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல்.
- கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.
- அகழ்வைப்பகங்களை அமைத்தல்.

## 3.2. நிர்வாக அமைப்பு

தொல்லியல் துறையானது, தொல்லியல் துறை இயக்குநரின் தலைமையின் கீழ் துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், மண்டல உதவி இயக்குநர்கள் மற்றும் தொல்லியல் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தொல்லியல் துறையில் தனித்துவமான அகழாய்வுப் பிரிவினை வலுப்படுத்தும் விதமாக ஓர் இணை இயக்குநர், மூன்று மண்டல உதவி இயக்குநர்கள், ஐந்து தொல்லியல் அலுவலர்கள், ஒரு செயற்பொறியாளர், இரண்டு உதவி செயற்பொறியாளர்கள், நான்கு இளநிலை பொறியாளர்கள், ஓர் இளநிலை மின்–பொறியாளர், நான்கு ஸ்தபதிகள், ஒரு துணை இயக்குநர் (நிர்வாகம்), இரண்டு உதவி இயக்குநர்கள் (நிர்வாகம்) என முக்கியத்துவம் வாய்ந்த 24 பணியிடங்கள் அரசால் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

புதிதாக கட்டப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்திற்காக, 34 புதிய பணியிடங்கள் (தொல்லியல் அலுவலர்–2, உதவி தொல்லியல் அலுவலர்–2, கண்காணிப்பாளர்–1, உதவியாளர்–1, இளநிலை உதவியாளர்–2, அருங்காட்சியகப் பாதுகாப்பு அலுவலர்–2 மற்றும் அருங்காட்சியகப் பராமரிப்பாளர்–24) ஆகிய பணியிடங்கள் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.



## 3.3. காலக்கணிப்பில் ஒரு திருப்புமுனை

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியிருப்பதற்குச் சான்றாக கீழடி அகழாய்வில் சேகரிக்கப்பட்ட கரிம மாதிரிகள் காலப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் காலம் கி.மு. 6–ஆம் நூற்றாண்டு (கி.மு. 580) என கால வரையறை செய்யப்பட்டதன் மூலம் தமிழி (தமிழ்–பிராமி) எழுத்தின் காலம் கி.மு.6–ஆம் நூற்றாண்டு என அறிவியல் அடிப்படையில் முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது. இதுவரை தமிழி வரிவடிவத்தின் காலம் கி.மு.5–ஆம் நூற்றாண்டு என்று கருதப்பட்டு வந்த நிலையில், அதற்கு மாறாக மேலும் ஒரு நூற்றாண்டு காலம் முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் முழுமையான கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றாக இக்காலக்கணிப்பு திகழ்கிறது.

கங்கைச் சமவெளி மற்றும் அதே சமகாலகட்ட நாகரிகங்களில் ஏற்பட்ட இரண்டாம் நகரமயமாக்கல் தமிழ்நாட்டிலும் ஏற்பட்டுள்ளது என்பதை கீழடி அகழாய்வு முடிவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியுள்ளது.

மேலும், கங்கைச் சமவெளிப் பகுதியில் கண்டறியப்பட்ட இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்று அறிஞர்களிடையே பொதுவாக நிலவி வந்த கருத்தியலை முற்றிலுமாக நீக்கியுள்ளது.

ஆதிச்சநல்லூருக்கு அருகிலுள்ள சிவகளை ஈமச்சின்னத்தில் சேகரிக்கப்பட்ட நெல்மணிகளின் மாதிரிகள் அமெரிக்காவில் புளோரிடா மாகாணம், மியாமி நகரிலுள்ள புகழ் பெற்ற பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஆய்வு முடிவானது தொல்லியலாளர்கள் இடையே ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சியது. சிவகளை அகழாய்வில் ஈமத்தாழியினுள் இருந்த ஈமச்சடங்குப் பானை ஒன்றில்

கண்டெடுக்கப்பட்ட உமியுடன் கூடிய அரிசியின் காலம் கி.மு.1155 என்று காலவரையறை செய்யப்பட்டுள்ளது.

பொருநை ஆற்றங்கரை நாகரிகம் ஏறத்தாழ 3,200 ஆண்டுகள் பழமையானது என்று அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டமை மிகவும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் உலகிற்கு அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110–விதியின் கீழ் இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவியல் பூர்வமான அறிக்கையை 09.09.2021 அன்று வெளியிட்டார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறையில், 2021–ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகழாய்வில், இரும்பின் அறிமுகம் மற்றும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் இருந்து இரும்புக் காலத்தின் துவக்க காலத்திற்கு மாறியதற்கான சான்றினை வழங்கும் இரண்டு முக்கியமான Accelerator Mass Spectrometry காலக்கணிப்புகள் கிடைத்துள்ளன.

மயிலாடும்பாறையில் இருந்து பெறப்பட்ட தற்போதைய இரண்டு Accelerator Mass Spectrometry காலக் கணிப்புகள், தமிழகத்தில் கி.மு இரண்டாயிரத்தில் இரும்புக் காலமும் இக்காலத்திற்கு முன்பே புதிய கற்கால காலகட்டமும் இருந்துள்ளதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் வலுசேர்க்கின்றன.

### 3.4. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

நாடு முழுவதும் கட்டி எழுப்பப்பட்ட மரபுச்சின்னங்களின் தொகுப்பினை விட்டுச் சென்றுள்ள அற்புதமான செழுமையும், பரந்த மற்றும் பன்முகத்தன்மையும் கொண்ட பண்பாட்டு மரபுச்சின்னங்களை இந்தியா பெற்றுள்ளது. பல்வேறு வகையான வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களின் செழுமையான தோற்றங்களைக் காணமுடிகிறது. தமிழ்நாடு வளமான மரபினையும் நவீன காலத்தில் அதன் வரலாற்றையும் உறுதியுடன் வெளிப்படுத்துகிறது. புகழ்மிக்க மற்றும் அழகிய கலை மற்றும் கட்டடக் கலை மரபுச்

சின்னங்களைக் காண்பதற்காக தமிழ்நாட்டிற்கு மீண்டும் மீண்டும் பயணம் மேற்கொள்கின்றனர். காலம் கடந்து நிற்கும் வரலாற்றுச் சின்னங்களில் காணப்படும் கலைகள், சிற்பிகளின் நேர்த்தியையும் திறமைகளையும் கண்கூடாக வெளிக்காட்டுகின்றன. பண்டைய கட்டடக் கலையின் அழகிய சிறப்பியல்புகளை கோயில்களின் விமானங்களும் கோபுரங்களும் பெற்றுள்ளன. மேலும், இம்மாநிலத்தில் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், கோட்டைகள், குளங்கள், கட்டடக் கோயில்கள், சத்திரங்கள் மற்றும் மண்டபங்கள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

இவை இயல்பாக சமய சார்பற்ற மற்றும் சமயம் சார்ந்தவையாக உள்ளன. பல்வேறு இயற்கை சீற்றங்களாலும் இயற்கைக்கு மாறான நிகழ்வுகளாலும் கோயில்கள் மற்றும் இதர கட்டடங்கள் சேதமடைகின்றன. எனவே, அவற்றிற்கு முறையான பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு அவசியமாகிறது.

பண்டைய மரபுச் சின்னங்களிலும் தொல்லியல் சார் இடங்களிலும் பாதுகாப்பு முறைகள் மற்றும் தொல்லியல் நெறிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். இந்த மாநிலத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் புனரமைக்கவும் தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம்–1966 மற்றும் விதிகள்–1971"–ஐ இயற்றியுள்ளது.

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின்படி "பண்டைய வரலாற்றுச் சின்னம்" என்பது, நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வரலாறு, தொல்லியல் அல்லது கலை முக்கியத்துவங்களை உள்ளடக்கிய, எந்தவொரு கட்டுமானச் சின்னம், மண்மேடு அல்லது ஈமக்காடு, குகை மற்றும் பாறைச் சிற்பம், கல்வெட்டு அல்லது ஒற்றைக்கல் நினைவுச் சின்னம் ஆகியவற்றை குறிப்பதாகும்.

தமிழ்நாடு அரசால் இது வரையில், மொத்தம் 103 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் "பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக" அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 100 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் 3 தொல்லியல் பாதுகாக்கப்பட்ட தளங்களும் அடங்கும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் மேற்கண்ட 103 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் மராத்தியர் அரண்மனை, மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை மற்றும் கவர்னர் மாளிகை, தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராஜபட்டினத்திலுள்ள மனோரா நினைவுத் தூண் ஆகியவை முக்கிய சுற்றுலாத் தளமாகவும் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகவும் திகழ்கின்றன.

ஒன்றிய அரசு தொல்லியல் துறை (Archaeological Survey of India) இதுவரை 251 சின்னங்கள் மற்றும் 160 தொல்லியல் இடங்கள் என ஆக மொத்தம் 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களை தமிழ்நாட்டில் பாதுகாத்து வருகின்றது.

**3.5. புதிதாக அறிவிக்கப்பட்ட சின்னங்கள்**

அண்மையில், பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், பங்குநத்தம் கிராமம், தருமபுரி மாவட்டம்; சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள், அனந்தமங்கலம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்; தமிழிக் கல்வெட்டு, நெகனூர்பட்டி கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்; தமிழிக் கல்வெட்டு, சமணத் தீர்த்தங்கரர் மற்றும் சமணர் படுக்கைகள், தொண்டூர் கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்; தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள், முதலைக்குளம் கிராமம், உசிலம்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்; தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணத் தீர்த்தங்கரர் சிற்பம், அரிட்டாப்பட்டி கிராமம், மேலூர்

வட்டம், மதுரை மாவட்டம் ஆகியவை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பட்டியலில் புதிதாக இடம் பெற்றுள்ளன.

### 3.6. புதிய தொல்லியல் தளங்கள்

சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டம், கொந்தகை மற்றும் அகரம் கிராமத்தில் காணப்படும் ஈமக்காடு மற்றும் வாழ்விடப் பகுதிகள்; தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், சிவகளை கிராமத்தில் உள்ள இரும்புக்கால தொல்லியல் தளங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணலில் தொல்லியல் தளங்கள் ஆகிய தொல்லியல் தளங்கள் புதிதாக பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, திருநெல்வேலி மாவட்டம் பதினாலாம்பேரி, சிவங்கை மாவட்டம் மகிபாலன்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் குறத்தியறை மற்றும் சிவகிரி, விருதுநகர் மாவட்டத்திலுள்ள புதுப்பட்டி, செவிலிப்பட்டி, திருச்சுழி, மூவரைவென்றான்,

திருத்தங்கல், ஆனையூர் ஆகிய பத்து ஊர்களிலுள்ள முற்காலப் பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படவுள்ளன. அதன்படி, சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் பதினாலாம்பேரி ஆகிய இடங்களில் உள்ள முற்கால பாண்டியற் காலக் குடைவரைக் கோயில்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், முத்தம்பாள்புரம் கிராமத்தில் உள்ள முத்தம்மாள் சத்திரம் போன்ற வரலாற்று சின்னங்களை பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவித்திட ஏதுவாக முன்னிலை அறிவிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

இவை தவிர, 83 வரலாற்றுச் சின்னங்கள் "பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தளங்களாக" அறிவிக்கப்படுவதற்காக தொல்லியல் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## 3.7. வரலாற்றுச் சின்னங்களின் தொடர் பராமரிப்பு பணிகளுக்கு நிதி

தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களுக்கான தொடர் பராமரிப்பு பணிகளுக்கு ரூ.2 கோடி நிதி வழங்கியுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.8. பழங்காலக் கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்

மேதகு ஆளுநர் அவர்கள் 2021–ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டின் சுற்றுலாத் திறனை முழுமையாக வெளிக்கொணரும் வகையில், ஒரு பெருந்திட்டம் நடப்பாண்டில் வெளியிடப்படும் எனவும் பழங்காலக் கோட்டைகளும் அரண்மனைகளும் பழமை மாறாமல்

புதுப்பிக்கப்பட்டு பராம்பரியச் சுற்றுலா ஊக்குவிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். அதன்படி, கீழ்காணும் மூன்று வரலாற்றுச் சின்னங்களில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் பொதுப்பணித் துறை வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ளன:–

| வ. எண். | வரலாற்றுச் சின்னம் | திட்ட மதிப்பீடு ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1 | சார்ஜா மாடி, தஞ்சாவூர் | 9.4285 |
| 2 | டேனிஷ் கோட்டை, தரங்கம்பாடி | 3.7728 |
| 3 | திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை | 3.7276 |
| | **மொத்தம்** | **16.9289** |

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், சாத்தாங்குடி கிராமத்தில் உள்ள கவர்னர் மாளிகை ரூ.4.46 கோடி மதிப்பீட்டில் தொல்லியல் நெறிமுறையின்படி புதுப்பிக்கும் பணி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் இடம்பெற்றுள்ள மராட்டா தர்பார் ஹாலில் உள்ள 17–ம் நூற்றாண்டைச் சார்ந்த மராட்டியர் கால சுவரோவியங்கள் புதுப்பிக்கும் பணி ரூ.6.948 கோடியில் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையின் சுற்றுச் சுவர் மறுசீரமைக்கும் பணி ரூ.0.63 கோடியில் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.9. புதிதாக பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகளை சுற்றுலா தளங்களாக மாற்றுதல்**

விழுப்புரம் மாவட்டம் நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டம் தொண்டூர் தமிழிக் கல்வெட்டு, மதுரை மாவட்டம் முதலைக்குளம் தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள், மதுரை மாவட்டம், அரிட்டாப்பட்டி தமிழிக் கல்வெட்டுகள்,

செங்கல்பட்டு மாவட்டம் அனந்தமங்கலம் சமணர் சிற்பங்கள் ஆகிய சின்னங்களை மேம்படுத்தி உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய தேவைகள் ஏற்படுத்திடும் பணிகள் ரூ.3 கோடி செலவில் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.10. உதிரிச் சிற்பங்கள், கல்வெட்டுகள் போன்ற தொல்லியல் கலைச் செல்வங்களை பாதுகாத்தல்**

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் தொல்லியல் சார் கலைச் செல்வங்களான உதிரிச் சிற்பங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றை அதே இடத்திலேயோ அல்லது வேறு பாதுகாப்பான இடத்திலேயோ பாதுகாத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட ரூ.3,22,05,547/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.1,38,45,547/- தொடராச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.11. தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்கால முன்னேற்றங்கள் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொல்லியல் துறை, பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் நினைவாக "தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்கால முன்னேற்றங்கள்" என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தியது. இக்கருத்தரங்கமானது சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2023 மார்ச் 10 முதல் 12 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்வில் 55 ஆய்வாளர்கள், புகழ்வாய்ந்த தொல்லியலாளர்கள் மற்றும் வரலாற்றாய்வாளர்கள் நேரடியாகவும் இணைய வழியாகவும் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இந்த நிகழ்வுகள் யூடியூப் (Youtube) வழியாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.

## 3.12. தொல்லியல் அகழாய்வுகள்

ஒரு நாட்டின் பண்டைய பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்து எழுதுவதற்கு அகழாய்வுகள் ஓர் அறிவியல் கருவியாக பயன்படுகிறது. பண்டைய இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுப் பதிவுகள் பொதுவாக மேட்டுக் குடியினரின் நிர்வாக மற்றும் சமூக வாழ்க்கையைக் காட்டுகின்றன. அதேநேரத்தில் அகழ்வாராய்ச்சி விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை வழங்குகிறது. மேலும், உயிரியல் மாதிரிகளானது பண்டைய கால சுற்றுச் சூழலியல், வாழ்வாதார முறைகள் மற்றும் காலவாரியான வாழ்க்கை முறை மாற்றங்கள் பற்றிய முக்கியத் தகவல்களை வழங்குகின்றன.

பல்கலைக் கழகங்கள், தொல்லியல் ஆய்வு நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள் மற்றும் முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான செயற்குறிப்புகளை மாநில அரசின் பரிந்துரையுடன்,

மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (Central Advisiory Board of Archaeology) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக்கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்படுகிறது.

இணைப்பில் உள்ளபடி, தொல்லியல் துறை இதுவரை 46 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 37 இடங்களின் அகழாய்வு அறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர, ஒன்றிய அரசின் தொல்லியல் துறை (Archaeological Survey of India) இதுவரை 50–க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது.

**3.13. தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்– 2022**

2022 ஆம் ஆண்டில் கீழ்காணும் ஏழு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகளான கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் – சிவகங்கை மாவட்டம்
2. சிவகளை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகள் – தூத்துக்குடி மாவட்டம்
3. மயிலாடும்பாறை – கிருஷ்ணகிரி மாவட்டம்
4. கங்கைகொண்டசோழபுரம் – அரியலூர் மாவட்டம்
5. வெம்பக்கோட்டை – விருதுநகர் மாவட்டம்
6. பெரும்பாலை – தருமபுரி மாவட்டம்
7. துலுக்கர்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்

அகழாய்வுகள் மட்டுமின்றி கூடுதலாக, புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் பொருநை (தாமிரபரணி) ஆற்றுச் சமவெளி பண்பாட்டின் தொல்லியல் வளத்தினைக் கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் ஆக இரண்டு தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.13.1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கீழடி, அகரம் மற்றும் கொந்தகை) – 8 ஆம் கட்டம்

கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் தொடர்ந்து எட்டாவது ஆண்டாக நடைபெற்ற தொல்லியல் அகழாய்வில் வைகை ஆற்றங்கரையில் உள்ள சங்ககால நகரக் குடியேற்றத்தின் தொல்பொருட்கள் மற்றும் கட்டடப்பகுதிகள் தொடர்ந்து கிடைத்துள்ளன.

எட்டாம் கட்ட அகழாய்வில் கீழடியில் 10 அகழாய்வு குழிகளில், ஒரு குழியில் இருந்து 3 மீட்டர் நீளமுள்ள செங்கல் அமைப்பும், 3 அடி நீளமுள்ள செங்கல் சுவருக்கு அருகில் உள்ள மற்றொரு குழியில் இருந்து 3 மீட்டர் நீளமுள்ள செங்கல் அமைப்பும், 15 இடங்களில் சுடுமண் உறை கிணறும், கருப்பு சிவப்பு வண்ண மண்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட 1700 தொல்பொருட்களைத் தவிர, மேல் அடுக்கு கண்ணாடி மணி அதிகளவில் கிடைத்துள்ளன. யானை

தந்தத்தால் செய்யப்பட்ட ஆட்டக்காய்கள், சுடுமண் ஆண்தலை, தந்தத்தால் செய்யப்பட்ட பகடைக்காய்கள், சுடுமண் காதணிகள், தக்களிகள், வட்டச்சில்லுகள், இரும்பு கத்தி மற்றும் ஆணிகள், செப்பு நாணயங்கள், கண்ணாடி மணிகள் மற்றும் சூதுபவள மணிகள் போன்ற குறிப்பிடத்தக்க தொல் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகரம் அகழாய்வில் ஆறு அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டு 4 சுடுமண் உறை கிணறுகள் மற்றும் 530 தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அகரம் அகழாய்வில் முதன்முறையாக சுடுமண் உறைக் கிணறு வெளிக்கொணரப்பட்டுள்ளது, உள்ளீடுபூட்டு முறையில் செயல்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

கொந்தகையில் 2 அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டு 59 தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. மனித எலும்புக்கூடுகள், 74 சூதுபவள மணிகள், 2 வாள்கள், 3 கத்திகள், 2 உளிகள் மற்றும் ஒரு கோடரி போன்ற இரும்புக் கருவிகள், அரிசி உமிகள் மற்றும்

கருப்பு–சிவப்பு வண்ணப் பானைகள் 170–க்கும் மேற்பட்ட தாழிகளில் இருந்து கிடைத்துள்ளன. மெருகூட்டப்பட்ட கருப்பு வண்ணப் பானைகள் மற்றும் மெருகூட்டப்பட்ட சிவப்பு வண்ணப் பானைகள் ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன. ஒரே தாழியில் 74 சூதுபவள மணிகள் கண்டெடுக்கப்பட்டது இக்கட்ட அகழாய்வின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பாக இருந்தது.

### 3.13.2. சிவகளை – 3 ம் கட்ட அகழாய்வு

சிவகளை கிராமம் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டத்தில் பொருநை ஆற்றின் (தாமிரபரணி) இடது கரையில் அமைந்துள்ளது. இந்த புகழ்பெற்ற புதைவிடப்பகுதி இவ்வாற்றின் கரையில் மேற்கே அமைந்துள்ளது. சிவகளை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தொடர்ந்து மூன்று கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிவகளை பரம்பு, பேட்மாநகர், மூலக்கரை ஆகிய இடங்களில் இரும்புக்

காலத்தைச் சார்ந்த புதைவிடப்பகுதிகள் காணப்படுகின்றன.

வளப்பான்பிள்ளை திரடு, செக்கடி, ஆவாரங்காடு, பொட்டல்கோட்டை, பராக்கிரமபாண்டி திரடு ஆகிய இடங்களில் வாழ்விடப்பகுதிகள் காணப்படுகின்றன. புதைவிடப்பகுதியான சிவகளை பரம்பில் தான் முதலில் அகழாய்வு செய்யப்பட்டது. இந்த மூன்று கட்ட அகழாய்வில் 160 தாழிகளும், 583 தொல்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. வாள்கள், கத்திகள், கோடாரிகள் போன்ற எண்பதுக்கும் மேற்பட்ட இரும்புப் பொருட்கள் தாழியின் உள்ளேயும் வெளியேயும் கண்டெடுக்கப்பட்டன. கிண்ணங்கள், மூடிகள், பானைகள், பிரிமனைகள் என மொத்தம் 750 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த இடத்தில் நடந்த அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகளுடன் கூடிய பானை ஓடுகள், மூன்று புதிய கற்காலக் கருவிகள், ஐந்து தமிழி எழுத்துப் பொறிப்புள்ள (தமிழ்–பிராமி) பானை ஓடுகள்

கிடைத்துள்ளன. தங்க ஆபரணங்கள், சீன நாணயங்கள் மற்றும் பானை ஓடுகளும் பராக்கிரமபாண்டி திரடில் கிடைக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கவை. புகைப்பான்கள், எலும்பிலான கூர்முனைப் பகுதிகள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல் துண்டுகள், வட்டச்சில்லுகள், மணிகள் மற்றும் செப்பு நாணயங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய தொல்பொருட்கள் ஆகும். பராக்கிரமபாண்டி திரடு பகுதியில் வெளிப்படுத்தப்பட்ட செங்கல் கால்வாயில், சுத்தமான தண்ணீர் ஓடியது என்று இருகலப்பாசிகள் பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஒரு தாழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட நெல்லினை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி இதனின் காலம் கிமு 1155 எனவும் தாமிரபரணி ஆற்றங்கரையில் 3200 ஆண்டுகளுக்கு முன்பே நெல் சாகுபடி நடைபெற்றுள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

### 3.13.3. மயிலாடும்பாறை – 2வது கட்ட அகழாய்வு

மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், தொகரப்பள்ளி கிராமத்திற்கு மேற்கே 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. நுண் கற்காலம், புதிய கற்காலம், இரும்புக் காலம், தொடக்க வரலாற்றுக் காலம் மற்றும் இடைக்காலத்தைச் சார்ந்த பண்பாட்டுப் பொருட்கள் இருந்ததற்கான சான்றுகளை வழங்கும் தமிழ்நாட்டின் மிக முக்கியமான தளங்களில் இதுவும் ஒன்றாகும்.

சுமார் 100 புதைவிடக்குழிகள் கொண்ட புதைவிடப்பகுதி 40 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்ட அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் முதல் கட்டத்தில் கிடைத்த கரிம மாதிரிகள் கரிம பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதில் இரும்புக் காலம் 4200 ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவருகிறது. மேலும் இந்த பகுதியில், சமூக உருவாக்கத்தைக் கண்டறிய அடுத்த கட்ட

அகழாய்விற்கு நீட்டிக்கப்பட்டது. தற்போதைய அகழாய்வு கட்டத்தில், சரியான குடியேற்ற முறை மற்றும் சமூகத்தின் சமூக–பொருளாதார நிலையை வெளிப்படுத்த முழுமையான பொருள் ஆதாரங்களை வெளிப்படுத்த மொத்தம் 30 அகழாய்வு குழிகள் அமைக்கப்பட்டன.

இந்த இடத்தில் தங்குமிடங்களில் நுண் கற்காலக் கருவிகள், அடிவாரத்தில் புதிய கற்காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள், புதிய கற்கால பள்ளங்கள், பாறை ஓவியங்கள், இரும்புக் கால பெருங்கற்காலப் புதைகுழிகள், குறியீடுகள், தமிழி எழுத்துப் பொறிப்பு கொண்ட (தமிழ்–பிராமி) பானை ஓடுகள் மற்றும் நினைவுக் கற்கள் போன்ற பழங்கால வரலாற்றுப் பண்பாட்டுப் பொருட்களும், இடைக்காலத்தின் வணிகக் கல்வெட்டுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது, நீண்டகாலங்களாக இத்தளம் பயன்பாட்டில் இருந்தமைக்கு சான்றாக விளங்குகிறது.

### 3.13.4. கங்கைகொண்டசோழபுரம் –2ம் கட்ட அகழாய்வு

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் கங்கைகொண்டசோழபுரம் அமைந்துள்ளது. இவ்வூர் முதலாம் இராசராசனின் (பொ.ஆ. 985–1014) வாரிசான முதலாம் இராசேந்திரனால் (பொ.ஆ. 1012–1044) சோழர்களின் தலைநகராக நிறுவப்பட்டது. அகழாய்வு தளம் மாளிகைமேடு, புகழ்பெற்ற கங்கைகொண்ட சோழேஸ்வரர் கோயிலுக்கு தென்மேற்கே 2 கி.மீ தொலைவிலும், உட்கோட்டை கிராமத்திற்கு தென்கிழக்கே சுமார் 2 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இப்பகுதி சோழ மன்னர்களின் வசிப்பிடமாக இருந்ததாக பரவலாக நம்பப்படுகிறது. இங்கு உள்ள மேட்டில் கிடைக்கும் கட்டடப்பகுதி சான்றுகளின் தன்மையும் இந்த கருத்தை ஆதரிக்கிறது. கட்டுமான எச்சங்கள், கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகள் ஆகியவை சோழர்களின் தலைநகரான கங்கைகொண்டசோழபுரத்தின் அரண்மனையின்

அடித்தளம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும், கட்டடப்பகுதிகள் அரண்மனையின் சாத்தியமான அடித்தளமாக இருக்கலாம் என்ற உண்மையை உறுதிப்படுத்துகின்றன. இதற்கு முன்னர் கங்கைகொண்டசோழபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1980, 1984, 1991, 1996, 2009 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வுகள் நடைபெற்றன. இதுவரை, மாளிகைமேட்டில் செங்கற்கள், கூரை ஓடுகள் உள்ளிட்ட ஏராளமான தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. பல செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இந்த இடத்தில் மேலும் அகழாய்வுகளை மேற்கொள்ள ஆர்வத்தைத் தூண்டின.

செங்கல் கட்டுமானங்களுடன், கூரை ஓடுகள் மற்றும் பானை ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இரும்பு பொருட்கள், செம்பு பொருட்கள், செப்பு நாணயங்கள், வெள்ளி நாணயம், தங்க வளையல், தந்த பொருட்கள், கண்ணாடி மணிகள் மற்றும் வளையல்

துண்டுகள், வட்டச்சில்லுகள், சுடுமண் பொருட்கள் மற்றும் செலாடன் மற்றும் பீங்கான் போன்ற சீன பானை ஓடுகளும் சேகரிக்கப்பட்டன. இந்த கண்டுபிடிப்புகள் கி.பி.12–ஆம் நூற்றாண்டில் சீன நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை நிறுவுகின்றன. மேலும் தொடர் அகழாய்வுகளின் மூலமாக கட்டுமான நடவடிக்கைகளின் தன்மை, அரண்மனையின் முழுமையான திட்டம் மற்றும் அந்த இடத்தில் செழித்தோங்கிய அரசியல் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளை அறிந்துகொள்ள கணிசமான சான்றுகளை வெளிக்கொணர இயலும்.

### 3.13.5. வெம்பக்கோட்டை – முதல் கட்ட அகழாய்வு

வெம்பக்கோட்டை விருதுநகர் மாவட்டத்தில் வைப்பாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. ஒரு ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்த குடியிருப்பு மேடு, தரை மட்டத்திலிருந்து சுமார் 6 மீட்டர் உயரம் கொண்டுள்ளது. 2021–2022 ஆம் ஆண்டில் வெம்பக்கோட்டையில் முதல் கட்ட

அகழாய்வு மேட்டுக்காடு அல்லது உச்சிமேடு என்று அழைக்கப்படும் அகழாய்வு மேட்டில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இங்கு வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் இடைக்காலம் வரை தொடர்ச்சியான தொல்பொருட்கள் கிடைக்கின்றன .

முதல் கட்ட அகழாய்வில் சூதுபவளம், அகேட், செவ்வந்திக்கல் மற்றும் படிகத்தால் செய்யப்பட்ட அரிய வகை கல் மணிகள் போன்ற 3254 தொல்பொருட்கள் கிடைத்தன. பல்வேறு வண்ணங்களில் அதிக எண்ணிக்கையிலான கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், கண்ணாடி வளையல்கள், சுடுமண் மணிகள், தக்களிகள், சுடுமண் ஆட்டக்காய்கள், புகைப்பான்கள், சுடுமண் பதக்கங்கள், விளையாட்டு பொருட்கள், சுடுமண் பொம்மைகள், சுடுமண் எடைக் கற்கள், சுடுமண் பந்துகள், சுடுமண் முத்திரைகள், சுடுமண் மனித மற்றும் விலங்கு உருவங்கள், பறவை உருவங்கள், திமிலுள்ள காளைகள், வட்டச்சில்லுகள், காதணிகள், சக்கரங்கள், தேய்ப்பான்கள், இரும்புப்

பொருட்கள், தங்கத்தினால் ஆன பொருள் மற்றும் செம்புப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. பானைகள், கிண்ணங்கள், பாத்திரங்கள், மூடிகள், தட்டுகள், குவளைகள், கிண்ணங்கள், சேமிப்பு கலன்கள் மற்றும் துளையிடப்பட்ட பானைகள், மெருகூட்டப்பட்ட சிவப்பு வண்ணப் பானைகள், மெருகூட்டப்பட்ட கருப்பு வண்ணப் பானைகள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணப் பானைகள் மற்றும் பழுப்பு நிற மட்கலன்கள் ஆகியவை அகழாய்வில் சேகரிக்கப்பட்டன. நுண் கற்கால மூலப்பொருட்கள் மற்றும் செர்ட் செதில்கள் போன்றவை நுண் கற்கால காலத்தின் சான்றுகளை பிரதிபலிக்கின்றன.

### 3.13.6. பெரும்பாலை – முதல் கட்ட அகழாய்வு

பாலாற்றின் கிளை நதியான நாகவதி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் பெரும்பாலை ஆகும். காவிரி ஆற்றின் முக்கிய கிளை ஆறுகளில் பாலாறும் ஒன்று. தருமபுரி–மேச்சேரி–பென்னாகரம் சாலையில் பென்னாகரத்திலிருந்து

25 கி.மீ தொலைவிலும், தருமபுரி மாவட்டத்தில் இருந்து வடக்கே 42 கி.மீ தொலைவிலும் பெரும்பாலை அமைந்துள்ளது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் விஜயமங்கலத்தைச் சேர்ந்த கார்மேகவைராயர் இயற்றிய கொங்கு மண்டல சதகம் என்னும் நூலில் இவ்வூர் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை என்றும், கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, சேலம் பகுதிகளின் ஒரு பகுதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 3 மீட்டர் பண்பாட்டு அடுக்கு கொண்ட குடியிருப்பு மேடு ஏ.எம்.எஸ் காலகணிப்பு மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின்படி கி.மு 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 13 ஆம் நூற்றாண்டு வரையிலான ஒரு தொடர்ச்சியான குடியேற்றத்தைப் பதிவு செய்கிறது. ஏ.எம்.எஸ் காலகணிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொல்பொருட்களான பானைகள், சுடுமண் உருவங்கள், குறியீடுடன் கூடிய

பானை ஓடுகள் மற்றும் பிற பொருட்களின் அடிப்படையில் பண்பாட்டு மண்ணடுக்கு மூன்று பண்பாட்டுக் காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன, அவை இரும்பு காலம், தொடக்க வரலாற்று காலம் மற்றும் தொடக்க இடைக்கால காலம் ஆகியவை முறையே கி.மு 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 3 ஆம் நூற்றாண்டு வரை, கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 4 ஆம் நூற்றாண்டு வரை, கி.பி 4 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 13 ஆம் நூற்றாண்டு வரை. இந்த இடத்தில் குறியீடுடன் கூடிய 1028 பானை ஓடுகள், 300க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட சுடுமண் பொருட்களும் கிடைத்துள்ளன.

### 3.13.7. துலுக்கர்பட்டி – முதல் கட்ட அகழாய்வு

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நம்பியாற்றின் கரையில் துலுக்கர்பட்டி அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூரின் அகழாய்வு, சமகாலத்தின் முக்கியமான பண்பாட்டுக் காட்சிகளை வெளிப்படுத்தியது. ஆதிச்சநல்லூரில் உள்ள வாழ்விடப்

பகுதியில் நடைபெற்ற அகழாய்வில், நிலத்தடி நீர்மட்டம் அதிகமாக இருந்ததால் இயற்கை மண்ணை அடைய முடியவில்லை. தற்கால பண்பாட்டுப் பொருட்களைப் புரிந்து கொள்வதற்காக, துலுக்கர்பட்டி அகழாய்வுத் தளம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வெள்ளை வண்ணம் தீட்டப்பட்ட கருப்பு–சிவப்பு வண்ணப் பானைகள் மற்றும் கருப்பு–சிவப்பு வண்ணப் பானைகள், ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளையில் கண்டறியப்பட்ட பானைகள் போன்ற தொல்பொருட்கள் தொடக்கக்கால வரலாற்றுக்கால பண்பாட்டு அடுக்குகளின் கீழே கண்டுபிடிக்கப்பட்டன. இது இரும்பு காலத்தின் தொடர்பை எடுத்துரைக்கிறது. தொடக்கக்கால வரலாற்றுக் காலத்தில் ஏராளமான குறியீடுடன் கூடிய பானை ஓடுகளும், கணிசமான எண்ணிக்கையில் தமிழி (தமிழ்–பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன.

### 3.14. புதிய கற்கால தளங்கள் ஆய்வு

தமிழ்நாட்டின் புதிய கற்கால இடங்களை அடையாளம் காண இத்துறை சர்மா பாரம்பரிய கல்வி மையத்துடன் இணைந்து வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாட்டின் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் புதிய கற்கால தளங்களில் ஆய்வுகள் மற்றும் அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தள அமைப்புகள், புவி–ஒருங்கிணைப்புகள் மற்றும் அவற்றின் நிலஇயல் சார்ந்த புவியியல் மற்றும் புவி–உருவவியல் சூழல்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பது போன்ற பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட தகவல்களை சேகரித்த பின்னர், இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வல்லுநர் குழுவால் நடத்தப்பட்டது. கள ஆய்வுகள் தொல்லியல் மற்றும் புவியியல் / புவி–உருவவியல்

அம்சங்களை உள்ளடக்கியது. கள ஆய்வில், செல்ட் உற்பத்தி தளங்களை அடையாளம் காணுதல் மற்றும் அரைக்கும் தளங்களை மறு ஆய்வு செய்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. ஆய்வு நோக்கங்களுக்காக பல மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. தற்போது இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் (Indira Gandhi Centre for Atomic Research) (IGCAR) உதவியுடன் தொல்பொருட்கள் மற்றும் பாறை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

### 3.15. பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரை பள்ளத்தாக்குகளில் கள ஆய்வு

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்மேற்கு பள்ளத்தாக்கில் பொதிகை மலையில் பொருநை (தாமிரபரணி) ஆறு உருவாகிறது. பொருநை (தாமிரபரணி) ஆற்றுப் பள்ளத்தாக்கினை மேல், இடை, கடைப் பகுதிகளாக பிரித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆற்றின் மேற்பகுதி முதல் இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கும் இடம்

வரை 670 ஊர்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 160 தொல்லியல் இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இதில் பெருங்கற்காலச் சின்னங்கள் மற்றும் வாழ்விடங்களுடன், வீரக்கற்கள், பாறைகளில் கிண்ணம் போன்ற பதிவுகள், நுண்கற்காலக் கருவிகள், கல்வெட்டுகள், உதிரிச் சிற்பங்கள், மரபுச் சின்னங்கள் போன்ற பல்வேறு தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.

### 3.16. சங்க கால கொற்கை துறைமுகத்தின் கடலோரத்தில் முன்கள ஆய்வு

இடைச்சங்க கால பாண்டியர்களின் கொற்கை துறைமுகத்தை அடையாளம் காண இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் (Indian Maritime University) மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (National Institute of Ocean Technology) ஆகியவற்றுடன் இணைந்து ஒரு முதற்கட்ட முன்கள ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. திட்டப்பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 கோடியில்

ரூ.0.64 கோடி நிதியினை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஏற்கவுள்ளது.

முதற்கட்ட ஆய்வு 02.09.2022 முதல் 09.09.2022 வரையும், இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு 23.01.2023 முதல் 16.02.2023 வரையும் நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கருவிகளான கொங்சங் (Model Kongsberg EM712), சிகில் பீம் எக்கோசவுண்டர் (Model Kongsberg EA440) மற்றும் சப்பாட்டம் ப்ரொஃபைலர் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் தற்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன.

### 3.17. தொல்லியல் அகழாய்வுகள் – 2023

இம்மாநிலத்தில் 2023–ஆம் ஆண்டு, தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள, தொடரும் செலவினமாக வழங்கப்படும் ரூ.5 கோடி நிதி

ஆதாரத்தில், இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் கீழ்காணும் எட்டு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகளான கொந்தகை, மற்றும் அகரம் – சிவகங்கை மாவட்டம்
2. கங்கைகொண்டசோழபுரம் – அரியலூர் மாவட்டம்
3. வெம்பக்கோட்டை – விருதுநகர் மாவட்டம்
4. துலுக்கர்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்
5. கீழ்நமண்டி– திருவண்ணாமலை மாவட்டம்
6. பொற்பனைக்கோட்டை – புதுக்கோட்டை மாவட்டம்
7. பூதிநத்தம் – தருமபுரி மாவட்டம்
8. பட்டறைபெரும்புதூர் – திருவள்ளூர் மாவட்டம்

### 3.18. அறிவியல் ஆய்வுகள்

தொல்லியல் பொருட்களின் கால வரிசையை முறையாக மறுகட்டமைப்பு செய்திடவில்லையெனில் தொல்லியல் ஆய்வுகள் பொருளற்றதாகி விடும். தற்பொழுது நடைபெற்று வரும் அகழாய்வுகளில்

கண்டெடுக்கப்படும் தொல்பொருட்கள் புகழ் பெற்ற ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் அறிவியல் நெறிமுறைகளின்படி பகுப்பாய்வுகள் செய்யப்படவுள்ளன.

பல்வேறு கட்டங்களில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்களை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கங்களை அளிப்பதற்கு விரிவான தொழில் நுட்பங்கள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வுகள் தொல்லியல் ஆய்வுகளுக்கு அவசியமாகிறது. இத்தகைய ஆய்வுகள் தொல்லியல் தரவுகளை சரியான கால வரிசைப்படி வைப்பதற்கும், தொடர் பண்பாட்டு வளர்ச்சியினை புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

தொல்லியல் துறை தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar), காந்த அளவி மதிப்பாய்வு (Magnetometer Survey), ஆளில்லா வான்வழி வாகன மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle) போன்ற தொழில் நுட்பங்களைப்

பயன்படுத்தி தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் களஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ள சரியான இடத்தை அடையாளம் காண்கிறது.

அறிவியல் பகுப்பாய்வுகளைப் பொறுத்தவரை நில தொல்லியல் துறை கீழ்கண்ட பல்வேறு அறிவியல் நிறுவனங்களுடன் இணைந்து தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்றை அறிவியல் வரிசையில் மீண்டும் நிறுவி வருகிறது.

1. லக்னோவின் பீர்பால் சாஹ்ணி இன்ஸ்டிடியூட் ஆஃப் பேலியோ சயின்சஸ் மற்றும் ப்ரெஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆஃப் பாண்டிச்சேரி ஆகிய நிறுவனங்களின் மூலம் மகரந்தப் பகுப்பாய்வுகள் மற்றும் பைடோலித் ஆய்வுகள் மூலம் பண்டைய கால பருவநிலைகளை கண்டறிதல்
2. மனித மரபணுவைப் புரிந்து கொள்ள மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்துடன் இணைந்து DNA பகுப்பாய்வு
3. இரும்பு, எஃகு மற்றும் உயர்நிலை–தகரம் கொண்ட வெண்கலத் தொழில் நுட்பத்தைப் புரிந்து கொள்வதற்காக, பெங்களூருவின்

தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து உலோகவியல் பகுப்பாய்வு

4. இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், கல்பாக்கம் மற்றும் புனே பல்கலைக் கழகத்தின் உதவியுடன் மூலப் பொருட்களின் ஆதாரங்களைப் புரிந்து கொள்வதற்காக மட்கலன்கள் பகுப்பாய்வு

5. சமூக அமைப்புகளின் தன்மையை அடையாளம் காண்பதற்கு புனே டெக்கான் கல்லூரியுடன் இணைந்து ஈமஎலும்பு எச்சங்கள் ஆய்வு.

தனிச் சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாக பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் தொல்–தாவரவியல், மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றினை அறிவியல் அடிப்படையில் மாற்றி எழுதிட தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.19. தொல்லியல் அகழ்வைப்பகங்கள்

கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல் பொருட்கள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின் கீழ் செயல்படும் 15 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி / மயிலாடுதுறை |
| 2) | ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் | பூம்புகார் / மயிலாடுதுறை |
| 3) | கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம் | கங்கைகொண்ட சோழபுரம் / அரியலூர் |
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம் / இராமநாதபுரம் |
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு / இராணிப்பேட்டை |

| | | |
|---|---|---|
| 6) | வரலாற்றுக்கு முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி / திருவள்ளூர் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை / மதுரை |
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 9) | மராத்தியர் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர் / கரூர் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர் / கோயம்புத்தூர் |
| 12) | குற்றாலம் அகழ்வைப்பகம் | குற்றாலம் / தென்காசி |
| 13) | திருக்கோவிலூர் அகழ்வைப்பகம் | திருக்கோவிலூர் / கள்ளக்குறிச்சி |
| 14) | தருமபுரி அகழ்வைப்பகம் | தருமபுரி / தருமபுரி |
| 15) | கீழடி அருங்காட்சியகம் | கொந்தகை / சிவகங்கை |

**3.20. கீழடியில் புதிய அகழ்வைப்பகம்**

சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி தொல்பொருட்களைக் காட்சிப்படுத்திட உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட 2019–2020 ஆம் ஆண்டு அரசால் ரூ.12.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 2022–2023–ஆம் நிதியாண்டில் கூடுதலாக ரூ.6.21 கோடி ஒதுக்கீடு செய்தது. அருங்காட்சியகம் 2 ஏக்கர் பரப்பளவில் 31,000 சதுர அடியில் பொதுப் பணித் துறையால் கட்டடப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் வகையில் உள்ளூர் கட்டடக்கலை பாணியைப் பின்பற்றியே இந்த அருங்காட்சியகம் வடிவமைக்கப்பட்டது. உள்ளூர் சூழலை மொழிசார் சூழலுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு ரூ.18.42 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வடிவமைப்புத் தத்துவம், பார்வையாளர்களை மையமாக கொண்ட உலகளாவிய அணுகல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பலதரப்பட்ட அணுகு முறைகளை பின்பற்றி கீழடியின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணர்கிறது, மேலும் கட்டடக் கலையினை ஒரு கருவியாக பயன்படுத்தி இந்த வரலாற்று தளத்துடன் மக்கள் கொண்டிருந்த பிரிக்க முடியாத பிணைப்பினை வெளிப்படுத்தியுள்ளது.

கீழடி அருங்காட்சியகம், 1) வைகை மற்றும் கீழடி 2) வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை 3) மட்பாண்டத் தொழில்கள் 4) ஆடையும் அணிகலனும் 5) கடல் வாணிபம் 6) வாழ்வும் வளமும் ஆகிய கருப்பொருட்களின் அடிப்படையில் ஆறு முக்கியமான கட்டடங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர, அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் பகுதியளவு திறந்த மற்றும் திறந்தவெளிகளில் பாரம்பரிய

விளையாட்டுகள், கைவினைப் பட்டறைகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம் பெற்றுள்ளன. அகழாய்வு குழியின் மாதிரி வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியக கட்டமைப்பு உள்ளூர் கட்டடக்கலை வடிவமைப்பை வெளிப்படுத்துகின்ற வகையில் முற்றங்கள், தாழ்வாரங்கள், மண்டபங்கள் போன்றவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து சிறப்பம்சங்களுடன் கூடிய கீழடி அருங்காட்சியகத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.03.2023 அன்று திறந்து வைத்து அருங்காட்சியகத்தை பார்வையிட்டார்கள். அருங்காட்சியகம் பொது மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ளது. வார நாட்களில் 2,000 பார்வையாளர்களும் வார இறுதி நாட்களில் 5,000 பார்வையாளர்களும் அருங்காட்சியகத்தினைப் பார்வையிடுகிறார்கள்.

## 3.21. பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.09.2021 அன்று சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் சிவகளை, கொற்கை, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் அகழாய்வுகளில் பெறப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக திருநெல்வேலியில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். 2022–ஆம் ஆண்டில் அரசு, அருங்காட்சியகம் அமைக்க ரூ.33.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி நகருக்கு அருகில் ரெட்டியார்பட்டி என்னுமிடத்தில் தேசிய நெடுஞ்சாலை எண்.45–க்கு அருகில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. இந்த அருங்காட்சியகம் 55,500 சதுர அடி பரப்பளவில் முற்றங்கள், தூண்கள், தாழ்வாரங்கள் போன்றவற்றுடன் பாரம்பரிய

கட்டடக்கலைப் பாணியில் கட்டப்படவுள்ளது. பொதுப்பணித் துறையின் (பாரம்பரிய பிரிவு) மூலம் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு, தற்போது தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் உள்ளது.

## 3.22. கங்கைகொண்டசோழபுரம் அருங்காட்சியகம், அரியலூர் மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.11.2022 அன்று கங்கைகொண்டசோழபுரம் அகழாய்வுத் தளத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். "சோழ அரசர் பல நாடுகளைக் கைப்பற்றியதுடன், சீனா உட்பட பல நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்" என்றும் மேற்படி பெருமைகளை உலகிற்கு பறைசாற்றும் வகையில் தமிழ்நாடு அரசு ஓர் அருங்காட்சியகம் அமைக்கவுள்ளது என்றும் அறிவித்தார்கள்.

கங்கைகொண்டசோழபுரத்தில் அமைக்கப்படவுள்ள அருங்காட்சியகத்திற்காக, அரியலூர் மாவட்ட நிர்வாகம் 0.76.70 ஏர்ஸ் நிலம் தேர்வு செய்து உள்நுழைவு

அனுமதி வழங்கியுள்ளது. தற்போது விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**3.23. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் மேம்பாடு**

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகத்தினை மேம்படுத்திடவும் தொல் பொருட்களை காட்சிப்படுத்திடவும் ரூ.8.27 கோடிக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் அருங்காட்சியக நிதிநல்கை திட்டத்தின் கீழ் 80:20 என்ற பங்கீட்டு அடிப்படையில் (ஒன்றிய அரசு பங்கு 80% = ரூ.661.76 இலட்சம், மாநில அரசு பங்கு 20% = ரூ.165.44 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது திருமலை நாயக்கர் அரண்மனையில் உள்ள பள்ளியறை, நாடகசாலை மற்றும் நூலக கட்டடம் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.24. அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல்:**

2022–2023–ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட உரையின் போது, "தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அகழ்வைப்பகம், திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள தொல்பழங்கால அகழ்வைப்பகம், தருமபுரியில் உள்ள நடுகற்கள் அகழ்வைப்பகம் ஆகியவற்றை ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்" என அறிவித்தார்கள். இதன் அடிப்படையில் கீழ்காணும் மூன்று அகழ்வைப்பகங்களும் மேம்படுத்தப்படவுள்ளன.

1. **பூண்டி அகழ்வைப்பகம்:**

   பட்டறை பெரும்புதூர் கிராமத்தில் ரூ.2.70 கோடியில் புதிய கட்டடம் கட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

2. **குற்றாலம் அகழ்வைப்பகம்:**

தென்காசி மாவட்டம் குற்றாலம் கிராமத்தில் ரூ.2.52 கோடியில் புதிய கட்டடம் கட்ட நிர்வாக அனுமதிக்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. **தருமபுரி அகழ்வைப்பகம்:**

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் அதியமான் கோட்டையின் அருகில் உள்ள சித்தி விநாயகர் கோயில் நிலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நடுகல் அகழ்வைப்பகத்திற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 3.25. கல்வெட்டியல்

கல்வெட்டியல் என்பது கற்பாறைகள், தூண்கள், கோயிற்சுவர்கள், செப்பேடுகள், காசுகள், கற்கள், உலோகங்கள், பானைகள், மரங்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், சங்குகள் மற்றும் ஓவியங்கள் மீதான எழுத்துப் பதிவுகள் பற்றிய ஆய்வாகும். இப்பதிவுகள்

உள்ளத்தை வியக்க வைப்பதாகவும், தகவல் பொருந்தியதாகவும் விளங்குகிறது.

பண்டைய நாகரிகங்களின் வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான முதன்மைச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது. நீதி இயல், சமுதாயப் பண்பாட்டியல், இலக்கியம், தொல்லியல் ஆகியவற்றின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்த முதன்மை ஆவணச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது.

இந்தியக் கல்வெட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தமிழகக் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. கல்வெட்டுகளின் எண்ணிக்கை, செப்பேடுகளின் எண்ணிக்கை ஆகிய எல்லா பிரிவுகளிலும் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாடு அரசால் தொல்லியல் துறையில் கல்வெட்டுகளுக்கென்று தனிப்பிரிவு, 1996–ல் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய பணி தமிழகத்தில் கோயில் சுவர்களிலும், கற்றூண்களிலும், கற்பலகைகளிலும், குகைத் தளங்களிலும், செப்பேடுகளிலும் மற்றும் பிறவற்றிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதாகும்.

தற்போது, மொத்தம் 38 மாவட்டங்களில் உள்ள 25,642 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, அவற்றின் மைப்படித்தாட்கள் இத்துறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது புதுக்கோட்டை, சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. படியெடுக்கப்பட்டுள்ள 25,642 மைப்படிகளில் 13,577 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 8,775 கல்வெட்டுகள் 59 தொகுதிகளாக நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளை படியெடுத்தல், படித்து பொருள் விளக்கம் செய்து நூல் வடிவில் வெளியிடுதல் போன்ற சீரிய பணிகளை மேற்கொள்ள 2019-2020 ஆம் ஆண்டில், ரூ.2 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்து ஆண்டு காலத்திற்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.40 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. படிக்கப்பட்ட கல்வெட்டுகள் "தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்" என்ற தலைப்பில் மாவட்ட வாரியாக பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை மேற்கொள்ள 15 கல்வெட்டு வல்லுநர்கள் நியமிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 3,000 கல்வெட்டுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை 5,200 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1,279 கல்வெட்டுகள் நூல் வடிவில் 6 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இதுவரை படியெடுக்கப்படாத கல்வெட்டுகளைப் படியெடுக்கவும், புதிய

கல்வெட்டுகளைக் கண்டறியவும் ஐந்து கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2022−2023 ஆம் ஆண்டு 399 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

**3.26. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்**

1974 ஆம் ஆண்டு முதல் தொல்லியல் துறையில் இயங்கி வந்த கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் மறுசீரமைக்கப்பட்டு 2020−2021 ஆம் ஆண்டு முதல் "தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இத்துறையின் சென்னை தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது.

"தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்", 2020−2021 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மானுடவியல்/ இயற்பியல்/ உயிரியல்/ நிலஇயல்/ பொறியியல்/ கணினி அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்ற 20 மாணவர்களுக்கு ஈராண்டு தொல்லியல் முதுநிலைப் பட்டய படிப்பினை நடத்தி வருகின்றது.

ஈராண்டு கல்வெட்டியல் முதுநிலைப் பட்டய படிப்பு 2021– 2022 ஆம் ஆண்டு முதல் தமிழ் / இந்திய வரலாறு / வரலாறு / பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்/ வரலாறு மற்றும் தொல்லியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் முதுகலைப் பட்டம் பெற்ற 10 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

2022–2023 ஆம் ஆண்டில், இளங்கலைக் கட்டடப் பொறியியல் அல்லது மானுடவியல்/ சமூகவியல்/ வேதியியல்/ இயற்பியல்/ உயிரியல்/ நிலஇயல் ஆகிய ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்ற 10 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் மரபு மேலாண்மை மற்றும் அருங்காட்சியகவியலில் முதுநிலைப் பட்டயப் படிப்பு புதியதாகத் துவங்கப்பட்டது.

இப்படிப்புகளில் நான்கு பருவத் தேர்வுகள் என ஒவ்வொரு பருவத் தேர்வுக்கும் 6 தாள்கள் உள்ளன. மொத்தம் 24 தாள்கள் கொண்ட இந்தப் படிப்புகளில் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் சார்ந்த

அனைத்துப் பாடங்களுடன் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. பல்வேறு தொல்லியல் சார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.5,000/– பயிலுதவித் தொகையாக வழங்கப்படுகிறது. எழுத்து மற்றும் நேர்முக தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் பட்டயப் படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம் கற்கருவிகள் தயாரித்தல், மணிகள் தயாரித்தல், வெண்கல வார்ப்பு, கட்டடம் மற்றும் இரசாயன பாதுகாப்பு முறைகள், அகழாய்வு மற்றும் கல்வெட்டுகள் படியெடுத்தல் மற்றும் படித்தல் குறித்து அந்தந்த துறை வல்லுநர்கள் மூலம் பட்டயப் படிப்பின்போது நேரடியாகப் பயிற்சி அளித்தது.

தஞ்சாவூர், கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம் போன்ற உலக மரபு நினைவுச் சின்னங்களுக்கும் (UNESCO Monuments) தமிழ்நாட்டின் கட்டடக்கலை, சிற்பக்கலை, கல்வெட்டு மற்றும் வரலாற்று

முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள ஏதுவாக திருவலஞ்சுழி மற்றும் திருபுவனம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் சென்று நேரடி பயிற்சியளிக்கப்பட்டது. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகம், அரியலூர் மாவட்டம் மாளிகைமேடு மற்றும் விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகழாய்வு தளங்கள், கழுகுமலை வெட்டுவான் கோயில், இராஜராஜன் அகழ்வைப்பகம், மராட்டா அகழ்வைப்பகம் மற்றும் தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் ஆகியவற்றையும் பார்வையிட்டனர். கொங்கர்புளியங்குளம், அரிட்டாபட்டி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருவாதவூர், திருமோகூர் முதலான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தமிழி, வட்டெழுத்து மற்றும் தமிழ்க் கல்வெட்டுகள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

### 3.27. தமிழ்நாட்டிலுள்ள பாறை ஓவியங்கள்

தமிழ்நாட்டின் பாறை ஓவியங்களை பாறை ஓவியங்கள் (Petrographs) மற்றும் பாறை செதுக்கல்கள் (Petroglyps) என இரண்டு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. பாறை ஓவியங்கள் காணப்படும் இடங்கள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

    - இயற்கை குகைத்தளங்கள்
    - பெருங்கற்கால கற்பதுக்கைகள்
    - வரலாற்றுக் காலத்தில் மனிதனால் வெட்டப்பட்ட குகைத்தளங்கள்

2. பாறைச் சுவடுகள் மற்றும் வெட்டுக் கீறல்கள்

தொல்லியல் துறை தமிழ்நாட்டில் உள்ள பாறை ஓவியங்களை ஆவணப்படுத்திட, தொல்லியல் ஆய்வாளர், மானுடவியலாளர், புவியியலாளர், நாட்டுப்புறவியலாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 8 உறுப்பினர்கள் கொண்ட குழுவினை

அமைத்துள்ளது. இக்குழுவானது கீழ்காணும் இடங்களில் ஆய்வு செய்துள்ளது:–

1. கருக்கியூர், நீலகிரி மாவட்டம்
2. சிறுமலை, திண்டுக்கல் மாவட்டம்
3. உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்
4. விழுப்புரம் மாவட்டத்தில் 6 இடங்கள்
5. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30 இடங்கள்

இவ்வாய்வின் போது, பாறை ஓவியங்களில் வேட்டைச் சமூகம், போர்க் காட்சிகள், கால்நடை பராமரிப்பாளர்கள், விலங்கின் மீது சவாரி செய்பவர் என பல்வேறு கருப் பொருள்களும் செவ்வண்ணம் மற்றும் வெள்ளை நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டன. இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட பாறை ஓவியங்களை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.28. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

ஓலைச்சுவடி என்பது காகிதம், பட்டை, துணி, உலோகம், பனை ஓலை அல்லது அறிவியல், வரலாற்று அல்லது அழகியல் மதிப்பு மிக்க பொருட்களில் கையால்

எழுதப்பட்ட குறிப்புகள் அடங்கியவை. ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு மொழிகளிலும் வரிவடிவங்களிலும் காணப்படுகின்றன.

வரலாற்று நிகழ்வுகள் அல்லது செயல்முறைகள் குறித்த நேரடித் தகவல்களை வழங்கும் பாறைகள், நிறுவனங்கள், வருவாய் பதிவுகள் போன்ற வரலாற்று பதிவுகளிலிருந்து ஓலைச் சுவடிகள் வேறுபடுகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மைய உருவாக்கம் 1861 ஆம் ஆண்டு முதல் ஒரு தனித்துவமான வரலாற்று பின்னணியைக் கொண்டுள்ளது. இந்த நூலகம் கர்னல் கொலின் மெக்கன்சி, சி.பி.பிரவுன் மற்றும் பேராசிரியர் பிக்போர்டு ஆகியோரின் சேகரிப்புப் படைப்புகளால் உருவாக்கப்பட்டு, பின்னர் தமிழக அரசால் ஓலைச் சுவடிகள் கூடுதலாக சேகரிக்கப்பட்டும் வருகிறது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக கட்டடத்தில் ஏழாவது தளத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் கணிதம், வானவியல், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகளில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில், 72,748 அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஓலைச் சுவடிகளை அதிக கவனமுடன் பாதுகாக்க புதிதாக 50 மர அலமாரிகள் வாங்கப்பட்டுள்ளன.

இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக ஓலைச் சுவடிகளை அளித்து வருகின்றனர். நாகர்கோயில் மாண்பமை நீதிமன்றம் 43 பெட்டிகளில் ஓலைச் சுவடிகளை இந்நூலகத்திற்கு வழங்கியுள்ளது. இதுவரை 21,00,000 ஓலைச் சுவடி பக்கங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3500 ஓலைச் சுவடிக் கட்டுகளின் 5,00,000 மின்னனுப் பக்கங்கள் www.tnarch.gov.in எனும் தொல்லியல் துறையின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

### 3.29. மாநில சுவடிக் குழுமம்

மாநிலத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் அவற்றை முறையாக மின்பதிப்பாக்கம் செய்திடவும் மாநில சுவடிக் குழுமம் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு 2019-2020 ஆம் ஆண்டு தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியது.

இத்திட்டத்தின் கீழ், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் ஒரு தனித்துவமான சுவடி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் உள்ள 1,00,000 ஓலைச் சுவடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், இதன் மூலம் இச்சுவடிகள் முறையாக பாதுகாக்கப்பட்டு மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டு எதிர்கால தலைமுறையினரின் நலனுக்காக ஆவணப்படுத்தப்படும். ஐந்து மண்டலங்களின் மூலம் மாநில சுவடிக் குழுமம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 3,53,080 சுவடி தாள்கள் மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இம்மாநில சுவடிக் குழுமத்தின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சர்வதேச தரத்துடன் கூடிய தரக்குறியீட்டுடன் அட்டவணைப் படுத்தப்பட்டு, இறுதியாக அறிஞர்கள் மற்றும் பொது

மக்களின் நலனுக்காக இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளன.

### 3.30. சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre)

புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் "தேசிய சுவடிக் குழுமம்" [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச் சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச் சுவடிகளைச் சேகரித்து, அவற்றினை குறுந்தகடுகளில் மின்னணு வடிவில் பதிவு செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் "சுவடிகள் வள ஆதார மையமாக" (Manuscript Research Centre) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 66,110 சுவடிகள் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டு,

புதுதில்லியிலுள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

**3.31. முக்கியச் செயல்பாடுகள் 2022– 2023**

- உலக மரபு வார விழாவினை (2022 நவம்பர் 19–25) கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், யாக்கை மரபு அறக்கட்டளை மற்றும் பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்துடன் இணைந்து மதுரை திருமலைநாயக்கர் அரண்மனையில் தமிழக நடுகல் மரபு என்ற தலைப்பில் கண்காட்சியும் ஆய்வு உரைகளும் நடத்தியது. அனைத்து அகழ் வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்கள் வாயிலாக தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் குறித்தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பணிப்பட்டறைகள், போட்டிகள், சொற் பொழிவுகள், பயிற்சிகள் போன்றவை அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர் சமுதாயம் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நிகழ்த்தப்பட்டன.

- கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்று வரும் 2–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளையும் அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் சிறப்புக் கண்காட்சியினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.11.2022 அன்று பார்வையிட்டார்கள். மேலும், அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் சிறப்புக் கண்காட்சி சிவகங்கை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் நடைபெற்ற புத்தக காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

- 2022 ஏப்ரல் 16 அன்று நடைபெறும் சித்திரை திருவிழா மற்றும் ஏப்ரல் 18 முதல் 24 முடிய நடைபெறவுள்ள "உலக மரபு தினவிழா"வினை முன்னிட்டு மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை மற்றும் தஞ்சாவூர் அரண்மனை ஆகிய பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் வளாகத்தில் கலை மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் மரபுசார் கலை

நிகழ்ச்சிகளான காவடி ஆட்டம், காளியாட்டம், கரகாட்டம், மாடாட்டம், மயிலாட்டம், தேவராட்டம், மரக்காலாட்டம், மானாட்டம், நையாண்டி மேளம் ஆகியவை நடத்தப்பட்டன.

- தொல்லியல் அலுவலர்களுக்கு கடல்சார் தொல்லியல் மற்றும் புவிசார் ஆய்வுகள் குறித்த பயிற்சி இந்திய கடல்சார் பல்கலைக்கழக வல்லுநர்கள் மற்றும் தொல்லியலின் சிறந்த அறிஞர்களுடன் இணைந்து நடத்தப்பட்டது. 10 தொல்லியல் அலுவலர்களுக்கான முதல் கட்ட "கடல்சார் தொல்லியல் மற்றும் புவிசார் ஆய்வுகள்" குறித்த பயிற்சி 28.11.2022 முதல் 02.12.2022 வரை 5 நாட்கள் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. தொல்லியல் அலுவலர்களின் நன்மை மற்றும் பயிற்சி அளிக்கும் வகையில் மேலும் இரண்டு கட்ட பயிற்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.32. முடிவுரை

தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. எனவே, கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும் அக்கறை கொள்ளவும் நமது பன்முகம் கொண்ட வளமையான பாரம்பரியத்தை உலகிற்கு அறியச் செய்யவும் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன என்றும் அதன் மூலம் நமது மேன்மைக்கும் அறிவுக்கும் வளம் சேர்த்து இறுதியாக தமிழ்நாட்டின் வரலாற்றை உலக அரங்கில் நிலைநிறுத்தும் என்றும் கூறலாம்.

தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கம் அருகே உள்ள அத்திரம்பாக்கத்தில் 15 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தோன்றினான் என்று சான்றுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. 15 இலட்சம் ஆண்டுகால வரலாற்றை மறுசீரமைப்பது இத்துறையின் முக்கிய மற்றும் சவாலான பணிகளில் ஒன்றாகும்.

உலகில் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களுடன் பன்முக ஆராய்ச்சியினை ஊக்குவிக்கும் அகழாய்வுப் பணிகளை தமிழ்நாடு தொல்லியல் துறை மேற்கொள்ளும். தற்போது நடைபெற்று வரும் களப்பணிகளான பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைப் பராமரித்தல், உள்ளூர் தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வு பணிகள் மேம்பாடு, அகழ்வைப்பகம் நிறுவுதல், உள்ளூர் பல்கலைக்கழகங்கள் உடனான கூட்டு முயற்சியுடன் கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் பொருளுணர்தல் போன்ற ஆய்வுப் பணிகள் நமது ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்படும்.

**தங்கம் தென்னரசு**
**தொழில் துறை அமைச்சர்**

# இணைப்பு

| வ. எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | கொற்கை | தூத்துக்குடி | 1968–69<br>2020–21 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 2 | பாஞ்சாலங் குறிச்சி | தூத்துக்குடி | 1968–69 | நவீன காலம் |
| 3 | வசவசமுத்திரம் | காஞ்சிபுரம் | 1969–70 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 4 | ஆனைமலை | கோயம் புத்தூர் | 1969–70 | பெருங் கற்காலம் |
| 5 | பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970–71 | இடைக் காலம் |
| 6 | கரூர் | கரூர் | 1973–74<br>1994–95 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 7 | பனையகுளம் | தருமபுரி | 1979–80 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 8 | போளுவாம் பட்டி | கோயம் புத்தூர் | 1979–80<br>1980–81 | இடைக் காலம் |
| 9 | கோவலன் பொட்டல் | மதுரை | 1980–81 | பெருங்கற் காலம் |
| 10 | தொண்டி | இராமநாத புரம் | 1980–81 | வரலாற்றுத் தொடக்க காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | கங்கை கொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980–81<br>1986–87<br>2008–09<br>2020–21<br>2021–22<br>2022–23 | இடைக் காலம் |
| 12 | கண்ணனூர் | திருச்சி | 1982–83 | இடைக் காலம் |
| 13 | குறும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984–85 | இடைக் காலம் |
| 14 | பழையாறை | தஞ்சாவூர் | 1984–85 | இடைக் காலம் |
| 15 | அழகன்குளம் | இராமநாத புரம் | 1986–87<br>1990–91<br>1992–93<br>1994–95<br>1996–97<br>2014–15<br>2016–17 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 16 | திருக் கோவிலூர் | விழுப்புரம் | 1992–93 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 17 | கொடுமணல் | ஈரோடு | 1992–93<br>1996–97<br>2019–20<br>2020–21 | பெருங்கற் காலம் & வரலாற்றுத் தொடக்க காலம் |
| 18 | சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992–93<br>1994–95 | இடைக் காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | படவேடு | திருவண்ணா மலை | 1992–93 | இடைக் காலம் |
| 20 | திருத்தங்கல் | விருதுநகர் | 1994–95 | நுண் கற்காலம் |
| 21 | பூம்புகார் | மயிலாடு துறை | 1994–95 1997–98 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 22 | மாளிகைமேடு | கடலூர் | 1999–2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 23 | தேரிருவேலி | இராமநாத புரம் | 1999–2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 24 | மாங்குடி | திருநெல் வேலி | 2001–02 | நுண் கற்காலம் |
| 25 | பேரூர் | கோயம் புத்தூர் | 2001–02 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 26 | ஆண்டிபட்டி | திருவண்ணா மலை | 2004–05 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 27 | மோதூர் | தருமபுரி | 2004–05 | புதிய கற்காலம் |
| 28 | மரக்காணம் | விழுப்புரம் | 2005–06 | இடைக் காலம் |
| 29 | பரிக்குளம் | திரு வள்ளூர் | 2005–06 | பழைய கற்காலம் |
| 30 | நெடுங்கூர் | கரூர் | 2006–07 | பெருங் கற்காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | மாங்குளம் | மதுரை | 2006–07 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 32 | செம்பியன் கண்டியூர் | நாகப் பட்டினம் | 2007–08 | பெருங் கற்காலம் |
| 33 | தரங்கம்பாடி | மயிலாடுது றை | 2008–09 | நவீன காலம் |
| 34 | இராஜாக்கள் மங்கலம் | திருநெல் வேலி | 2009–10 | இடைக் காலம் |
| 35 | தலைச்சங்காடு | மயிலாடு துறை | 2010–11 | இடைக் காலம் |
| 36 | ஆலம்பரை | காஞ்சிபுரம் | 2011–12 | நவீன காலம் |
| 37 | ஸ்ரீரங்கம் | திருச்சிராப் பள்ளி | 2013–14<br>2014–15 | இடைக் காலம் |
| 38 | உக்கிரன் கோட்டை | திரு நெல்வேலி | 2014–15 | இடைக் காலம் |
| 39 | பட்டறை பெரும்புதூர் | திரு வள்ளூர் | 2015–16<br>2017–18<br>2022–23 | கடைக் கற்காலம் |
| 40 | கீழடி | சிவகங்கை | 2017–18<br>2018–19<br>2019–20<br>2020–21<br>2021–22<br>2022–23 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 41 | ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 2019–20<br>2020–21 | இரும்புக் காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | சிவகளை | தூத்துக்குடி | 2019–20<br>2020–21<br>2021–22 | இரும்புக் காலம் |
| 43 | மயிலாடும் பாறை | கிருஷ்ண கிரி | 2020–21<br>2021–22 | புதிய கற்காலம் |
| 44 | வெம்பக் கோட்டை | விருதுநகர் | 2021–22<br>2022–23 | நுண்கற் காலம் |
| 45 | துலுக்கர்பட்டி | திரு நெல்வேலி | 2021–22<br>2022–23 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 46 | பெரும்பாலை | தருமபுரி | 2021–22 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 47 | கீழ்நமண்டி | திருவண்ணா மலை | 2022–23 | பெருங்கற் காலம் |
| 48 | பொற்பனைக் கோட்டை | புதுக் கோட்டை | 2022–23 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 49 | பூதிநத்தம் | தருமபுரி | 2022–23 | புதிய கற்காலம் |




தொல்லியல் துறையால் அகழாய்வு
மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழடி மற்றும் கீழ்நமண்டி அகழாய்வுப் பணிகள் மற்றும் கீழடி புனை மெய்யாக்க செயலி ஆகிய பணிகளை 06.04.2023 அன்று காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கீழடி அருங்காட்சியகத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு 05.03.2023 அன்று திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம், மாளிகைமேடு அகழாய்வுத் தளத்தினை 28.11.2022 அன்று பார்வையிட்டார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.05.2022 அன்று கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் மைதானத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் மற்றும் அவற்றின் மாதிரிகளின் கண்காட்சியினை பார்வையிட்டார்கள்.



மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்களின் நினைவாக 2-ஆவது பன்னாட்டுக் கருத்தரங்கினை 10.03.2023 அன்று துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.



16.01.2023 மற்றும் 17.01.2023 ஆகிய நாட்களில் பொங்கல் திருநாளினை முன்னிட்டு மதுரை மாவட்டம், திருமலை நாயக்கர் அரண்மனை வளாகத்தில் நடத்தப்பட்ட மரபுசார் கலைநிகழ்ச்சிகள்



தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவன மாணவர்களுக்கு தஞ்சைப் பெரிய கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை மற்றும் கல்வெட்டுகள் குறித்து களப்பயிற்சியின் போது விளக்குதல்



சிவகங்கை மாவட்டம். கீழடி அருகில் உள்ள கொந்தகையில் முதுமக்கள் தாழிகளுடன் உள்ள அகழாய்வு தளத்தின் வான் வழிப் பார்வை



தூத்துக்குடி மாவட்டம். சிவகளை அகழாய்வு தளத்தின் வான்வழிப்பார்வை




அரியலூர் மாவட்டம். கங்கை கொண்ட சோழபுரம், மாளிகைமேடு அகழாய்வில் வெளிக் கொணரப்பட்டுள்ள கட்டடப் பகுதிகளின் வான்வழிப்பார்வை



கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட
கற்பதுக்கையுடன் கூடிய ஈமப்பேழை





தருமபுரி மாவட்டம், பெரும்பாலை அகழாய்வு குழியில் கண்டெடுக்கப்பட்ட மூன்று தரைத் தளங்கள் மற்றும் சுடுமண்ணால் ஆன பெண் உருவம்





திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்பட்டி அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள்
(1) வெள்ளிமுத்திரைகாசுகள் (2) தமிழிபொறிப்பு கொண்ட பானை ஓடுகள்



விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அகழாய்வு குழியின்
மண்ணடுக்குகளின் தோற்றம்



பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்படவுள்ள தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்த நாட்டில் உள்ள முத்தம்மாள்சத்திரம்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.